Zoology 87 A/L
திரு. நாகநாதன்
மூளையியல்
Sat., Sun : 8.30-9.30
Tues., Thu: 3.00-5.00
பாகுபாடு
Sat. & Sun: 10.30-11.30
Saturday: 6.30-8.30
New Master
INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Botany 87 A/L
திரு. குகாதரன்
Sat. & Sundays
9.30-10.30
இனப்பெருக்கம்
2.30-3.30
பிறப்புரிமையியல்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

மலே:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸு மார்கழி மீ 26 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா அவ் பிறை 9 (10-01-1987) SANJEAVY■ REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :51

ஈழத்தமிழர் பட்டினி போடப்பட்டால்

# தமிழகம் பொங்கும் என்று எச்சரிக்கை

புதுடில்லி, ஜன. 9

இலங்கைத் தமிழரை பொருளாதாரத் தடை மூலம் பசி, பட்டினி போட இலங்கை அரசு முற்பட்டால் தமிழகம் கொதித்து எழும் அப்போது இந்திய அரசு பார்த்துக்கொண்டிராது,

இது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு நன்கு தெரியும் என்று பிரபல அரசியல் விமர்சகர் ஜி கே ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

"இலங்கை அரசில் உள்ள தீவிரவாதிகள் வடபகுதிக்கு மின், தண்ணீர் விநியோகத்தைத் துண்டிக்கவும் நெருக்குவர்.

அப்போது தமிழ் நாட்டுமக்கள் கொதித்து எழுவர். இது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு தெரிந்த விஷயம்.

இலங்கை அரசின் இந்த பிடிவாதப் போக்கைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்காது"

இப்படி திரு ரெட்டி எழுதியிருக்கிறார்.

(இ-ஐ-எ)

## வல்வையில் சிப்பாய்கள் துப்பாக்கிச்சூடு

வல்வெட்டித்துறை, ஜன. 10

வல்வை இராணுவ முகாமிலிருந்து வல்வைச் சந்தியை நோக்கி நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சிப் பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைளை யாழ் புலிகளின் தளபதி கிட்டு வடமராட்சிப் பகுதிப் பொறுப்பாளர் சூசையுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

(இ-160)

## வீடுகளுக்கு தீவைத்த சிப்பாய்கள் மீது தமிழ் ஈழ ராணுவம் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 10

கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்று பண்ணை கடற்கரை வழியாக வெளியே வந்த சிப்பாய்கள் வீடுகளுக்கு தீ வைத்தனர்.

இதனை எதிர்த்து தமிழ் ஈழ ராணுவம் மோட்டோ ஷெல், ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதனால் முகாமுக்கு திரும்பிய சிப்பாய்கள் கொட்டடிப் பக்கமாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

தமிழ் ஈழ ராணுவம் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் காரணமாக தமிழீழ இராணுவத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

எமது ஷெல் தாக்குதலினால் கொல்லப்பட்ட காயமடைந்த சிப்பாய்களை விமானமூலம் பலாலிக்கு கொண்டு சென்றனர்.

இதனைத் தொடர்ந்து சீ பிளேனும், இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் நகரை வட்டமிட்டன என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

எரிபொருள் தடையை எதிர்த்து

## அரச ஊழியர்கள் நேற்று வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்கள ஊழியர்கள் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று நான்கு மணி நேர வெளிநடப்புச் செய்தனர்.

யாழ் குடாநாட்டுக்குள் எரிபொருள்களை எடுத்து வருவதற்கு அரசாங்கம் விதித்துள்ள தடையை எதிர்த்தும், அவற்றை நீக்கக் கோரியுமே இந்த வெளிநடப்பு மேற்கொள்ளப்பட்டது.

யாழ் செயலகம், கல்வித் திணைக்களம், உட்பட அனைத்து திணைக்களங்களையும் சேர்ந்த ஆயிரத்தும் மேற்பட்ட ஊழியர்கள் தங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் நான்கு மணி நேரம்

(8-ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியில்

வல்வெட்டித்துறை, ஜன. 10

நேற்று வடமராட்சிப் பகுதியிலும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

சுமார் ஒருமணி நேரம் இந்த வெளிநடப்பு நீடித்தது.

கூட்டுறவுச்சங்க ஊழியர்களும் நேற்றைய வெளிநடப்பில் பங்குபற்றினர். (இ-160)

## தொலைத் தொடர்பு கட்டடம் சேதம்

யாழ்ப்பாணம் ஜன 10

புதன்கிழமையும் வியாழக்கிழமையும் நகரில் நடைபெற்ற நேரடி மோதல் காரணமாக யாழ்தொலைத்தொடர்பு திணைக்களத்துக்குபலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கிதுடன் குளிரூட்டப்பட்ட இயந்திர அறைகளும் சேதம் அடைந்திருப்பதாக தெரியவருகிறது.

சேதமடைந்த கட்டிங்கள், பொருள்கள், என்பனவற்றின் பெறுமதி 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்க

(8-ஆம் பக்கம் பார்க்க)

## சர்வோதய வருகை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஜன. 10

சர்வோதய இயக்கத்தினரின் யாழ்ப்பாணம் வருகை பின் போடப்பட்டுள்ளது,

இன்றுஅவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

(இ-10)

## தெற்கில் குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜன.10

பலாங்கொடைக்கு அருகில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்றில் குண்டு வெடித்தது.

இதில்ஒரு இளம் பெண் உட்பட மூன்று பயணிகள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த புதன் இடம் பெற்ற.

(இ-ஐ-எ)

# இலங்கை சவாரி விட இந்தியா இனியும் இடம் கொடுக்கக் கூடாது

## 'இந்து' ஆசிரியர் தலையங்கம்

புதுடில்லி, ஜன 9

இலங்கை சவாரி விடுவதற்கு இந்தியா இனியும் இடம் கொடுக்கக் கூடாது.

பாதிக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழருக்காக இந்தியா விரைந்து முழு ஆதரவையும் வழங்க வேண்டும்–

இப்படி 'இந்து' ஆங்கில நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளது,

மிகவும் காரசாரமாக எழுதப்பட்ட அத்தலையங்கத்தின் சாராம்சம் வருமாறு;

1983இல் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து இந்திய மத்தியஸ்தத்தின்மூலம் பேச்சுக்கள் நடந்தன.

ஆனால் அரச படைகள் தமிழர் மீது இனக்கொலையை நடத்தி வந்தன.

இப்போது சொந்தமக்கள்மீது எரிபொருள் தடை விதித்து, அதோடு சேர்ந்து இராணுவ நடவடிக்கை எடுப்பதில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் இலங்கையோசனைகளை முன் வைப்பதும் பின்னர்அவற்றில்இருந்து பின்வாங்குவதும் சாதாரணமாகிவிட்டது,

இந்த நிலையில் இந்திய எதிர்ப்புச் சக்திகளுக்கு இலங்கை இடமளித்து வருகிறது.

இஸ்ரவேல், பாகிஸ்தான், சீனு. தென் ஆபிரிக்கா மற்றும் மேற்கு நாட்டின் கூலிப் படைகள் இலங்கையில் ஈடு

(8-ம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம் ஜன. 10

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய ஜனவரி மாதத்திற்குரிய ஓய்வூதியம் இம்மாதம் 17ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

விவரம் வருமாறு;–

17-1-87 சனி – சிவில், ஆசிரியர் ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்கும்.

19-1-1987 திங்கள்–– விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம்.

20-1-1987 செவ்வாய் ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள் படைக்கலசேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியம்.

கொடுப்பனவுகள் காலை 9 மணியில்இருந்து பிற்பகல் 1 மணிவரை வழங்கப்படும். (இ-எ)

# தொலைபேசியில் பதில் அளிக்கும் சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். தொலைத்தொடர்பு நிலையத்துக்கு எடுக்கப்படும் சகல தொலைபேசிகளுக்கும் அங்குள்ள சிப்பாய்களே பதில் அளிக்கின்றனர்.

தொலைத்தொடர்பு ஊழியர்கள் எந்த வித பயமுமின்றி திணைக்களத்தில் வந்து கடமை ஆற்றலாம் என்றும் யாழ்-மக்கள் வேண்டிய நேரம் தம்முடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம் என்றும் சிப்பாய்கள்தம்முடன்தொடர்புகொள்ளவோரிடம் தெரிவிக்கின்றனர்.

தொலைத் தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றிய தமிழ் ஊழியர்களின் பெயர்களையே இவர்கள் பாவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பருத்தித்துறை 5 சிப்பாய்கள் பலி!

கொழும்பு ஜன. 10

பருத்தித்துறை இராணுவ முகாமில் கடந்த வியாழன் காலை வெளியே வந்த சிப்பாய்கள் மீது தமீழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இப்படி வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்று அறிவித்தது. (இ-எ)

### சுபநேரம்

10–01–1987
சனிக்கிழமை
சுபநேரம்:
3.33 முதல் 5.03 வரை
ராகுகாலம்:
9.33 முதல் 11.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

# ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 10

ஆனையிறவில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா சிப்பாய்களுக்கும் இடையே பலத்த சண்டை நடைபெற்றது.

நேற்றுக் காலை 8 மணி அளவில் ஆனையிறவு முகாமில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வாகனங்கள் சகிதம் யாழ்ப்பாணப் பக்கமாக சுமார் முன்னூறு யார் தூரம் வரை முன்னேறி வந்தனர்.

இவர்களின் வருகையை அடுத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்கள் மோட்டோ ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளும் இதனை எதிர்த்து கடும் சமர் நடத்தியதன் காரணமாக சிப்பாய்கள் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர் புறப்பட்ட வாகனங்கள் நேற்றுக் காலை திரும்பி வந்தன.

முதலில் சென்ற வாகனங்களே ஆனையிறவு இராணுவ முகாமைத் தாண்டிச் சென்றிருந்தன.

வெளியூரில் இருந்து வந்த வாகனங்களை முகாமில் தடுத்து வைத்த சிப்பாய்கள் மாலை 5 மணிக்கு பின்னரே அவற்றை விடுவித்தனர்.

(இ-10)

## ராஜீவ் எச்சரிக்கை?

புதுடில்லி, ஜன. 9

யாழ்ப்பாணப் பகுதியில் இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள் நடத்திவரும் தாக்குதல்களை உடனடியாக இலங்கை அரசு நிறுத்த வேண்டும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கை அரசிடம் உறைப்பாகக் கூறியிருப்பதாக அறியப்படுகிறது ஆனால் அதனை ஊர்சிதம் செய்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இலங்கைத் தமிழ் மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் இந்நிலையில் இலங்கை பாதுகாப்புப்படைகள் தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் மீண்டும் சிப்பாய்கள் வெளியேற முயற்சி

வல்வெட்டித்துறை ஜன 10

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து மீண்டும் வெளியேவர முயன்ற சிப்பாய்களை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்.

நேற்றுக் காலை 7.00 மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

இராணுவ முகாமின் மேற்குப் பக்கமாக சரமாரியானமோட்டோ ஷெல்களை முகாமில் இருந்து பொழிந்த வண்ணம் சிப்பாய்கள் வெளியேற முயற்சித்தபோது புலிகள் ஆட்லறி' களன்

(8-ம் பக்கம் பார்க்க)

பலாலி நஷ்டஈடு

## யாழ் செயலகத்தில் திங்களன்று காசோலை

யாழ்ப்பாணம், ஜன.10

பாலாலி விமான நிலைய தள விரிவாக்க பகுதிக் காணிகளில் குத்தகைக்கு பயிர் செய்து நஷ்டமடைந்தவர்களுக்குநஷ்ட ஈட்டுக்கான காசோலை எதிர்வரும் திங்கள் காலை யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

பயிரழிவு நஷ்டம் பெறத்தகுதியுடையோர் டிசம்பர் பிற்பகுதியில் யாழ் செயலகத்துக்குச் சென்று தங்கள் கொடுப்பனவு உறுதிச் சிட்டில் கையெழுத்திட்டனர்.

அவர்கள் மட்டுமே திங்கள் அன்று யாழ். செயலகத்துக்கு வந்து தங்களுக்கு உரிய காசோலையை அடையாளக் கார்ட்டைக்காட்டி பெற்றுச் செல்லும்படி உதவி அரச அதிபர் திரு.எஸ். பி பாலசிங்கம் அறிவித்து இருக்கிறார்,

பலாலி விமான நிலையத்தள விரிவாக்கப்பகுதி காணி எல்லைக்குள் அடங்கிய மயிலிட்டி வடக்கு,

(8-ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரிலும் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன. 10

காரைநகர் கடற்படைத் தள விஸ்தரிப்புக்கு எடுக்கப்பட்ட சில காணிகளில் இருந்த வீடுகளின் பெருமதியில் ஒரு பகுதியை உடனடி நிவாரணமாக வழங்க யாழ். அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்.

இது சம்பந்தமாக ஏற்கனவே நடைபெற்ற விசாரணையில் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ் செயலகத்தில் வைத்து நிவாரணப் பணத்துக்கானகாசோலை வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாக யாழ் செயலகம் வந்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் கையொப்பம் இட்டவர்கள் மட்டுமே அடையாள கார்ட்டுடன் வந்து காசோலையைப் பெற்றுக் கொள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். பி. பாலசிங்கம் அறிவித்திருக்கிறார். (இ-எ)

# கருத்துக் கலசம்

## பழைமையும் புதுமையும்

பழைமைவேறு. புதுமை வேறு இரண்டும் ஒத்துப் போக முடியாதவை என்று கருதப்படுவது உண்டு. ஆனால் பழைமையில் இருந்து தான் புதுமை பிறக்கிறது

இது புதுமைகள் பொலிந்த காலம். நவீனத்துவங்கள் நிறைந்த காலம். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட இப்போது எத்தனையோ மாற்றங்கள் எத்தனையோ முன்னேற்றங்கள்.

எங்கள் சாப்பாட்டில் மாற்றம். நோய்களில் மாற்றம். போக்குவரத்தில் மாற்றம். விவசாயத்துறையில் மாற்றம். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மாற்றம். பழைமையைக் கண்ணாலும் காணமுடியாதவாறும் மாற்றங்கள் நடந்துள்ளன.

நவீனத்துவம் அதிகரிக்க அதிகரிக்க, வாழ்க்கையில் நலிவுகளும் தொய்வுகளும் மலிகின்றன. மனிதனின் வாழ்வு நிம்மதி அற்றதாகிறது.

உலகம் வேகமாக ஓட முயற்சிக்கிறது. அதாவது மனிதன் விரைவாக விஷயங்களை நடத்த விழைகின்றான். அதற்கேற்ற விதத்தில் விஞ்ஞானத்தை தனது வசதிக்கு ஒத்துப் போகக்கூடியதாக வளைக்கிறான்.

பழைமை என்பது ஆற அமர ஆராய்ந்து, வாழ்ந்து, அனுபவிக்க விழைந்த போக்கு. அதனால் அக்கால மனிதனது வாழ்வு உறுதியான, திடகாத்திரமான வாழ்க்கையாக இருந்தது.

இப்போதைய நலிவுக்கு மருந்துபழைமை தான். எனவே எங்கள் வாழ்க்கையில் பழைமையையும்சிறிது சேர்க்க வேண்டும்; ஈடாட்டம் காணும் மனித வாழ்வுக்கு பழமை தான் சிறந்த டானிக்காகும்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் நாம் முழுக்கமுழுக்கப் பழைமைக்கே போகவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது.

அரிசிச் சோறு தானும் உண்ணக் கிடைக்குமோ என்ற நிலை உருவாகலாம். அப்போது மரவள்ளி, குரக்கன், பனாட்டு, வரகு ஆகியவற்றை சாப்பிட நிர்ப்பந்திக்கப்படுவோம், இப்போதே அதற்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.

எங்களில் எத்தனை பேர் இதனைப் பற்றி இதுவரை யோசித்திருக்கிறோம்? கிணறு உள்ள வெறும் காணிகள் எத்தனை உண்டு?

எரிபொருள் தடையோடு நடக்கப் பழகுகிறார்கள் பலர்! அதேபோல எல்லாத் துறைகளிலும் சிறிது பழைமையை நாடுவது நல்லது. அது எமக்குக் கை கொடுக்கும்.

பழைமையை பழையதாக ஒதுக்கிவிடாது புதியதோடு அதனையும் சேர்க்கப் பழக வேண்டும்.

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

✶ நோர்வே செல்லும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவசமாக பொண்ட் செய்து கொடுக்கப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**தேவை**

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு படப்பிடிப்பாளர் தேவை படப்பிடிப்புடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் தெரிந்தவராக இருக்க வேண்டும். விளம்பரஎண்: 42, மே/பா. உதயன், த. பெ. எண்; 23, யாழ்ப்பாணம்.

மரக்கடைச்சல் மூலம் அலங்காரப்பொருட்கள், பொம்மைகள் செய்வதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை, விண்ணப்பிக்கவும்: பாலன் கலைக்கூடம், ஆடியபாத வீதி, கல்வியங்காடு. யாழ்ப்பாணம்.

**வேலைவாய்ப்பு**

பயிலுநர்கள்

ஹைடில்பேர்க் (Heidelberg) அச்சுயந்திரத்தில் பயிலுநராகப் பயிற்சி பெறவிரும்புகின்றவர்கள் விண்ணப்பிக்கலாம், பயிற்சியின் போது எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப் படமாட்டாது திறமையாகப் பயிற்சியை முடித்துக் கொண்டவருக்கு எதிர்காலம் பயனுள்ளதாக அமையும் விளம்பர எண்; 45 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.


# எரிபொருள் தடை தமிழரை வழிக்கு கொண்டு வரும் வழியா?

கொழும்பில் யுத்த சன்னதம் யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத் தடையுடன் இழந்த பகுதிகளை மீட்கும் முற்றுகை, புதுடில்லியிலோ மந்திராலோசனை.

இனப்பிரச்சினை நெருக்கடியான கட்டத்தை அடைந்து விட்டதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

இழந்த பிரதேசத்தை 'மீட்க'ப் போவதாக அமைச்சர் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் கூறிவிட்டார்.

தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தவா? அல்லது அதற்கு விட்டுக் கொடுக்கவா? - இப்படி தர்மிஷ்டர் வேறு அமெரிக்க சஞ்சிகைக்குக் கொடுத்த பேட்டியில் சலிப்புத் தெரிவித்து விட்டார்

முழு அளவிலான இராணுவத் தீர்வு காணுவதற்கு அரசு கவலைப்பட வேண்டியது இல்லை -இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கூறிவிட்டார்.

பண்டா — செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட சமயம் சுட்டிப்பயலாக இருந்தவர் இப்போது வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார்

இதன் மத்தியில் இழந்த தமிழர் தாயகத்தை மீளப் பெறும் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தமிழர் உரிமைப் போராட்டம் புதிய பரிமாணம் பெற்று விட்டது.

**பொருளாதாரத் தடை**

கறுப்பு இனமக்களின் உரிமைகளை மறுத்து வரும் வெள்ளைச் சிறுபான்மை இன தென்ஆபிரிக்க அரசு மீது உலக நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்து வருகின்றன.

ஸ்ரீலங்கா அரசோ உரிமைப் போராட்டம் நடத்தும் ஒரு காரணத்துக்காக தமிழர் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

**உள்ளும் புறமும்** — குறுமுனி

இதற்கு அத்துலத் கூறும் காரணம் விசித்திரமானதாக உள்ளது.

எரிபொருள் தடையால் பாதிக்கப்படும் தமிழர், பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் படி போராளிகளை நிர்ப்பந்திப்பர் -- இது தான் அமைச்சர் கூறும் காரணம்.

கிழக்கு மாகாணத்திலே உள்ள தமிழர்கள் அரச மற்றும் உதிரிப் படைகளின் வன்செயல்களினால் பிறந்த மண்ணை விட்டு அகதிகளாக வெளியேறி விட்டனர்.

சுதந்திரம், சுயமரியாதையுடன் சொந்த மண்ணுக்கு திரும்பிச் சென்று வாழும் நன்னாளைத் தான் அவர்கள் பல கஷ்டங்கள் மத்தியில் அரைப் பட்டினியுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் அரை குறைத் தீர்வு எதையும் ஏற்கும் படி அவர்கள் தமிழர் அமைப்புக்களிடம் விண்ணப்பிக்கவில்லை

**இந்த வரி ஏன்?**

இந்த நிலையில் யாழ் குடாநாட்டு மக்களை எரிபொருள் தடைபோட்டு வழிக்குக் கொண்டுவர ஸ்ரீலங்கா அரசு எண்ணியுள்ளது தான் விந்தையாக உள்ளது

தமிழரின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒன்றை வழங்கி வழிக்குக் கொண்டு வருவதை விடுத்து ஏன் இந்த வழியை அரசு தேர்ந்து எடுத்தது?

அங்குதான் எல்லாமே தங்கியுள்ளது

பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அபிலாஷைகளுக்கு ஏற்ப தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அரசுத் தலைவர்களின் முழு நோக்கமும்.

இதன் காரணமாகத் தான் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் இப்படி இழுபறியில் இருக்கின்றன.

# டிக்ஸிற் சந்திப்புக்கள்: கொழும்பில் குழம்பல்

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்ன?

கடந்த இரண்டுவாரங்களாக அந்தமான் தீவுகளில் விடுமுறையைக் கழித்த பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த புதன் கிழமைதான் புதுடில்லி திரும்பினார்.

உடனே ஸ்ரீலங்காத் தீவுபற்றி மந்திராலோசனை நடத்த ஆரம்பித்து விட்டார்.

இந்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழு அடுத்தடுத்து இரண்டு தினங்கள் கூடி வடபகுதி நிலைமைபற்றி விவாதித்தது.

இதனிடையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே என். டிக்ஸிற், ஏனைய நாடுகளின் தூதர்களைச் சந்தித்து இலங்கை விவகாரம்பற்றி கருத்துப் பரிமாற்றம் நடத்தியிருக்கிறார்

இக் 'கருத்துப் பரிமாற்றம்' கொழும்பு அரசு வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது

ஒருநாட்டின் தூதர், இன்னொரு நாட்டின் பிரச்சினை பற்றி ஏனைய நாட்டுத் தூதர்களுடன் பேசலாமா? இது ராஜதந்திர முறையா?

இப்படியெல்லாம் அரசு சார்பு கொழும்புப் பத்திரிகைகள் கேள்விக்கு மேல் கேள்வி எழுப்பிக் குழப்பின.

சிதம்பரம் குழு கடைசியாக கொழும்பில் இருந்து திரும்பிய பின்னர் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் 'கிணற்றினுள் போடப்பட்ட கல்' ஆகவே உள்ளது.

நிலைமை மோசமடையும் இத்தருணத்தில் கவலை, எச்சரிக்கை ஆகியவற்றை மீண்டும் தெரிவிப்பதுடன் இந்தியா நின்று விடுமா?

அல்லது உருப்படியான நடவடிக்கை எடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமா?

தமிழ்ப் போராளிகள் மீது கொடுக்க வேண்டிய அளவு நிர்ப்பந்தத்தை இந்தியா கொடுத்தாகி விட்டது

இனி இலங்கை அரசு மீது நிர்ப்பந்தத்தைக் கொடுக்குமா? பொறுத்திருந்து பார்ப்போமே!

# அரசாங்க அலுவலகங்களில்.... "சிகதி"

## பொங்கலுக்கு முன்னர் விறகு விலை குறையுமா?

தற்பொழுது தேசிய அடையாள அட்டைகள் பெறுவதில் திணைக்களங்களில் இடம் பெறும் தாமதங்கள் அதிகம். இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு இவை கிடைப்பதில் இயல்பான தாமதத்திலும் பார்க்க மேலும் பல சுணக்கம் ஏற்படுவது வழக்கமாகி விட்டது. அடையாள அட்டைகளை இங்கு இடம் பெறும் அனர்த்தங்களால் பலர் இழந்து விட்டனர். இந் நிலையில் அடையாள அட்டைக்கு ஒருவரின் கைவிரல் அடையாளமும் இருக்க வேண்டியதின் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தி இருக்கின்றார் கை இழந்தவர்கள் பலர் எமது பிரதேசத்தில் இருப்பதால் அதற்கும் என்ன வழி என்பதை அவர் தான் சொல்ல வேண்டும்

* * *

விறகுப் பிரச்சினை, எல்லாவற்றையும் விட அதி முக்கிய இடத்தை பிடித்து விட்டது. விறகை சந்தைப்படுத்துவதற்கு ஓர் கூட்டுத்தாபனம்; அதன் கீழ் அதிகாரிகள் கிளைகள் இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் நஷ்டத்தில் இயங்கும் கிளைகளை மூடுவதற்கும் நடவடிக்கைகள் இங்கே மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களின் பயன் உள்ள நடவடிக்கையின் பயனாக அவைகள் தொடர்ந்தும் இயங்கும் வாய்ப்பைப் பெற்றன.

அண்மையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பை இட்டு பலர் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்திருந்தனர். தற்பொழுது ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் மரக் கூட்டுத்தாபனத்திற்கு விறகு கிடைக்கவில்லை, ஆனால் அது வருவதற்கு முன்னர் இதே காலப் பகுதிகளில், கூட்டுத்தாபனக் கிளைகளில் விறகு இல்லை என்ற நிலையே இருந்தது. ஆனால் 1986 ஆம் ஆண்டு பிற்பகுதியில் கூட விறகு இங்கே போதியளவு கைவசம் இருந்தது. பிராந்திய பொறுப்பாளர்களின் குறிப்பிடத்தக்க நடவடிக்கையே இதற்குக் காரணம் எனக் கருதவேண்டி உள்ளது இதற்காக அவர்களை பாராட்ட வேண்டும்.

விறகின் விலையும் தொன்ஒன்றுக்கு ரூபா. 25/- பொங்கல் திருநாளுக்கு முன்னதாக குறைக்கப்படலாம் எனத் தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்

* * *

திணைக்களங்களின் குறைபாடுகள் பற்றி இங்கு எழுதுவது குறித்து பல வாசகர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை தெரிவித்திருந்தனர். எது எப்படியாயினும் குறைபாடுகள் தெரிந்திருப்பின் தான் எவரும் எதையும் திருத்திக் கொள்ளமுடியும். திணைக்கள உயர் அதிகாரிகளும் தங்களுக்குக் கீழ் கடமை புரியும் பணியாளர்களின் தரத்தையும் திறமையையும் தெரிந்து கொள்ளமுடியும். அத்துடன் பொது மக்களும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் நடவடிக்கைகளையும் அவதானித்து விழிப்புடன் இருப்பர். இதில் எதுவித தவறும் இல்லையே?

* * *

அரச கூட்டுத்தாபனங்களில் பொறுப்பான பதவி வகிப்பவர்கள், பொருள்களை கடனுக்கு வழங்கும்படி உத்தரவு இடுவதினால் சில வேளைகளில் அதனை அறவிட முடியாத நிலையும் ஏற்படுவதாகத் தெரிகிறது. இதனால் ஸ்தாபனம் நஷ்டமடைய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு, ஆட்குறைப்பும் ஸ்தாபனத்தைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலைப்பாடும் ஏற்படுகின்றன. இதற்குப் பொறுப்பானவர்கள் பொதுப் பணத்தினை சரியான முறையில் நிர்வகிக்க வேண்டும், அல்லது அரசு இதற்கான கட்டுப்பாடான நடைமுறைகளைச் செயற்படுத்தி முறையான விசாரணைக்குட்படுத்தி அப்பேர்வழிகளைப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்பொழுது தான் நாடும் நாமும் நலன் பெறுவோம்.

* * *

## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், ஜன 10

கவிஞர் முருகையனின் 'வெறியாட்டு', 'அது-அவர்கள்' கவிதை நூல்களின் விமர்சன அரங்கு கொழும்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

தேசிய கலை இலக்கியப் பேரவைக் கொழும்புக் கிளை ஒழுங்கு செய்துள்ள இவ்விமர்சன அரங்கு. சில்லையூர் செல்வராஜன் தலைமையில் அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் நடைபெறும் (இ-5)

## புலிகள் வீரவணக்கம்

பருத்தித்துறையில் சிப்பாய்களுடன் நடந்த நேரடிமோதலில் வீரமரணமடைந்த பாபு (ஆர். பாலகிருஷ்ண ராஜா, கரவெட்டி), வின்சென்ட் (வைகுந்தவாசன், தும்பளை) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (இ-10)

# மாணவர் ஆர்ப்பாட்டங்கள் சீனாவைச் சீர்குலைக்குமா?

கம்யூனிஸ்ட் ஆட்சி நாடுகளில் அதிக ஜனநாயக உரிமைகள் கோரி காலத்துக்குக் காலம் கிளர்ச்சிகள், எழுச்சிகள் ஏற்பட்டுவருவதை சமீப கால வரலாறு மூலம் அறியலாம்.

1956 ஆம்ஆண்டு ஹங்கேரியில் ஏற்பட்ட கிளர்ச்சி, 1968 ஆம் ஆண்டு செக்கோஸ்லாவாக்கியாவில் அதிபர் டுப்செக் தலைமையில் ஏற்பட்ட எழுச்சி ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை.

இதன் பின்பு போலந்தில் சுதந்திர தொழிற்சங்கத் தலைவர் வலேஸா தலைமையில் நடைபெற்ற மாபெரும் தொழிற்சங்கப் போராட்டமும் தற்போது முற்றாக அடக்கப்பட்டு விட்டது.

ஹங்கேரியையும், செக்கோஸ்லாவாக்கியாவையும் பொறுத்தமட்டில் சோவியத் யூனியன் தனது பலம் வாய்ந்த வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் படைகளை அனுப்பி கிளர்ச்சியை முறியடிக்கவேண்டி இருந்தது.

போலந்தைப் பொறுத்தமட்டில் வார்ஸோ இராணுவத் தலையீடு எந்நேரமும் ஏற்படலாம் என்ற கட்டம் உருவாகி இருந்த போதிலும் போராட்டம் ஒருவாறு அடக்கப்பட்டு விட்டது.

இந்த வரிசையில் தற்போது மற்றொரு கம்யூனிஸ்ட் நாடான சீனாவில் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

சீனாவில் தற்போது நடைபெறும் சம்பவங்களை சோவியத் முகாம் நாடுகளான ஹங்கேரி, செக்கோஸ்லாவாக்கியா, போலந்து ஆகியவற்றில் நடந்த சம்பவங்களுடன் ஒப்பிட முடியாத போதிலும் சீனாவில் நடைபெறும் சம்பவங்களையும் அரசுக்கு எதிரான ஓர் எழுச்சி என்றேகூறலாம்.

1949 ஆம் ஆண்டு மா-சே-துங் தலைமையில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் அரசாங்கத்துக்குச் சவாலாக அமைந்திருப்பதாக தற்போதைய மாணவர் ஆர்ப்பாட்டங்கள் குறித்து அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் அதாவது டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி சீனாவில் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. கூடிய ஜனநாயக உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம் கோரி இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி மாணவரின் ஜப்பானிய எதிர்ப்பு [illegible] அப்போதைய குவாமின்டான் ஆட்சியா[illegible] நசுக்கினர்.

அதே டிசம்பர் 9 ஆம் திகதியிலேயே தற்போது சீன பல்கலைக்கழக மாணவர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் 12 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த ஒரு மாத காலமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலீஸ் தடையையும் மீறி இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சீனாவின் மாபெரும் தலைவராக இருந்து 1976 ஆம் ஆண்டு மறைந்த மா-சே-துங்கின் கல்லறை உள்ள ரினன்மென் சதுக்கத்தை மையமாக வைத்து இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதால் சீன ஆட்சியாளர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

82 வயதான சீனத் தலைவர் டெங்சியாவோ பெங் தற்போது நடைபெறும் சம்பவங்களின் பின்னணியில், தைவான் செயற்படுவதாகக் குற்றஞ் சாட்டிவருகிறார்.

1949 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் புரட்சியின் போது குவான்மிடான் ஆட்சியாளரான சியாங் கே-ஷேக் அமெரிக்கப் படைகளின் உதவியுடன் தைவானைக் கைப்பற்றினார்.

தற்போது தொடர்ந்து அமெரிக்க ஆசியுடன் குவாமின்டான் ஆட்சியாளர்களே தைவானில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

மா-சே-துங் தலைமையிலான சீன அரசை அங்கீகரிக்க மறுத்து தைவான் தான் உண்மையான சீனா என்று அமெரிக்கா கூறி வந்தது.

அமெரிக்க அதிபராக இருந்த சமயம் ரிச்சர்ட் நிக்ஸன் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம், மா-சே-துங்கின் மறைவு ஆகியவற்றின் பின்னர் அமெரிக்க நிலையில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

1949 ஆம் ஆண்டு குவாமின்டான் தலைவர் சியாங்-கே - ஷேக்கை தைவானை நோக்கித் துரத்துவதற்கும் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஸ்தாபிப்பதற்கும் சீன மாணவர்களே மா-சே-துங்குக்கு பக்கபலமாக இருந்தார்கள்.

அதே மாணவர் சக்தி மீண்டும் எழுச்சி அடைந்திருப்பது சீன ஆட்சியாளர்களுக்குப் புதிய தலையிடியை உருவாக்கி வருகிறது.

சீன மாணவர்களின் தற்போதைய ஆர்ப்பாட்டங்களுக்கு மாசேதுங் மறைவிற்குப் பின்னர் பதவிக்கு வந்த தலைவர்களின் மிதவாதபோக்கும் ஒருகாரணம் ஆகும்.

மாசேதுங்கின் மறைவுக்குப் பின்னர் சீனா தனது மூங்கில் திரையில் இருந்து நழுவி மேற்கத்திய செல்வாக்குக்கு உட்பட்டு வருகிறது.

உலகிலேயே பெரிய இராணுவத்தைக்கொண்டுள்ள சீனா தற்போதைய ஆர்ப்பாட்டங்களை நொடிப்பொழுதில் முறியடிக்க முடியும்

ஆனால் அதன் எதிர் விளைவுகள் ஆட்சியாளர்களுக்கு விரோதமான வலுவான சக்தி ஒன்றைத் தோற்றுவிக்கக் கூடாது என்பதில் சீனத் தலைவர் டெங்சியாவோ பெங் அதிக அக்கறை காட்டிவருகிறார். *

**உலக உலா** — என்.பி.சீலன்

## பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கை இல்லை

### புதன்போன்று தொடருமாம்

கொழும்பு, ஜன. 10

வட பகுதியில் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது கடந்த புதன் கிழமை நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை போன்றவை தான் அடிக்கடி நடத்தப்படும்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை.

கடந்த புதன்கிழமை பிற்பகல் யாழ்நகரில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்தது. இராணுவ [illegible] ஒருவர் கூட [illegible] (இ-எ)

## சிப்பாய்களால் எண்ணெய் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜன 10

பொதுமக்கள் தமது அன்றாட பாவனைக்காக வாங்கிச்செல்லும் மண் எண்ணெயைக் கூட ஓமந்தைசிப்பாய்கள் பறிமுதல் செய்கின்றனர்.

இதன் காரணமாக நெடுங்கேணி, ஓமந்தைப் பகுதி மக்கள் விளக்கு எரிக்கக்கூட எண்ணெய் இல்லாமல் பரிதவிக்கிறார்கள்.

வவுனியா மாவட்டத்தில் எரிபொருள் தடை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)


**North Lanka Medical College**

Applications are invited from suitable persons for the following posts:-

1. One Post of Demonstrator -- Department of Anatomy
2. One Post of Lecturer in Physiclogy
3. One Post of Lecturer in Pathology
4. One Post of Lecturer in Microbiology
5. One Post of Lecturer in Forensic Medicine
6. One Post of Lecturer in Parasitology
7. One Post of Lecturer in Anaesthetics
8. One Post of House Officer each in the following Units:-
   (a) Medical Unit
   (b) Obstetric Unit
   (c) Surgical Unit
   (d) Paediatric Unit

All the above posts are for the Co-operative Teaching Hospital. Moolai. The House Officers will be provided with Quarters within the Co-operative Teaching Hospital premises at Moolai. Applications should reach this office on or before 31st January, 1987.

Apply to:-
Secretary,
Board of Governors,
N. L. M. C.
No. 164, Fourth Cross Street,
JAFFNA.

**வெற்றிடம்**
**PRODUCTION ASST.**

மனையியல் (Home Science) துறையில் விருப்புள்ள, A. L. பயின்ற பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சண்டுக்குளிக்கு அண்மையில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும் பூரண விபரங்களுடன் ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும். M 70, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**ஹோம் பினான்ஸ் லிமிட்டட்**
அளிக்கும்
**சொகுசு பஸ் சேவை**
**யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்**

11. 1. 87 ஞாயிறு தொடக்கம் காலை 7-30 மணிக்கு பாதுகாப்பான வசதியான பஸ் சேவையை ஆரம்பிக்கின்றோம்.

ஆசனம் பதிவு செய்யுமிடங்கள்

ஹோம் பினான்ஸ் லிமிட்டட்
88 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24310.

ராஜா புக்கிங் சென்ரர்,
ராஜா தியேட்டர்.
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23180

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் விடுதலைப் போருக்கு முதன் முதலில் வித்திட்ட தியாகிகள்

இலங்கைத் தீவின் தமிழ் மக்களுக்கு ஒரு பண்பாட்டுப் பெருவிழா வைத் தானும் தமது சொந்த விருப்பப்படி ஒழுங்கு செய்து சுதந்திரமாகக் கூட்டம் நடத்தும் உரிமை உண்டா? அது அரசாங்கத்தினாலேயே மறுக்கப்பட்டமையை 'ராஜகம்' என்று கூறுவதா? அல்ல 'அராஜகம்' என்று வர்ணிப்பதா?

இவ்வாறான கேள்விகளுக்கு விடைகாண வேண்டிய நிலைக்கு நாகரிக உலகம் தள்ளப்பட்டது 1974 ஜனவரி மாதத்தில் என்றால் அது மிகையல்ல!

ஐரோப்பாக் கண்டத்தின் நவநாகரீக நகரான பாரிஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடுத்துவரும் மாநாட்டை இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்று முன் கூட்டியே முடிவு செய்யப்பட்டிருந்தது அந்த முடிவிற்கு அமைவாக அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை நான்காவது மாநாட்டைச் சிறப்புற நடத்துவதற்கான முன்னொழுங்குகளைச் செய்வதற்கு ஆயத்தமானது.

அப்போதே மேற்படி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. மாநாட்டை ஸ்ரீலங்கா நாட்டின் தலைநகரான கொழும்பில் நடத்த முன்வருமாறும், அங்ஙனம் நடத்த இசைவு தெரிவிக்கப்பட்டால், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தையே மாநாட்டுத் தேவைகளுக்கு இலவசமாக உபயோகிப்பதற்குத் தருவதாகவும், அப்போதுதான் மாநாட்டுக்கே அனுமதி தரப்படுமென்றும் மாநாட்டு அழைப்பாளர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

மாநாடு நடைபெறுவதற்கு மூன்றே மூன்று தினங்களுக்கு முன்புதான் அதனை நடத்துவதற்கான அனுமதி அரசினால் வழங்கப்பட்டது.

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்ஈந்து உந்து சக்தியானோர்

அதற்கு முன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மட்டுமல்லாது, கொழும்பில் இருந்து வெளியிடப்படும் 'தேசிய தினசரிகளும்' நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுதல் சாத்தியமற்றது என்ற தோற்றத்தையே ஏற்படுத்தி இருந்தன.

முக்கூட்டு அரசினதும், அதன் ஆதரவாளர்களதும் 'அராஜக' கெடுபிடிகளையும் மிஞ்சி நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றே தீரும் என்ற நிலையேற்பட்டதும், மாநாட்டில் பங்குபெற வருகைதரவிருந்த அயல் நாட்டு அறிஞர்களுக்கு நுழைவாணை (விசா) மறுக்கப்பட்டது. தப்பித் தவறி முன்கூட்டியே பெறப்பட்டிருந்த நுழைவாணையுடன் இலங்கைக்கு மேற்படி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அயல் நாட்டுத் தமிழாய்வாளர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

ஒரு சர்வதேச பண்பாட்டு மாநாட்டில் பங்கு பெற வந்திருந்த பன்னாட்டு அறிஞர்களும் இவ்விதமாக நாடு கடத்தப்பட்டமை சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்களால் முதன்மைச் செய்தியாகப் பெரிது படுத்தப்பட்டது உள்நாட்டுப் பத்திரிகைகளால் மூடி மறைக்கப்பட்ட மேற்படி மாநாடு சம்பந்தப்பட்ட செய்திகள் அரசின் கெடுபிடி நடவடிக்கைகளால் அகில உலகப் பிரபல்யம் பெற்றன.

> தமிழர் உரிமைப் போராட்டம் 1956 இலேயே ஆரம்பித்து விட்டது ஆனால் தீவிரமான விடுதலைப் போராட்டம் 1974 இன் பின்னர் தான் ஆரம்பமானது அந்தத் தீவிர விடுதலைப் போராட்டத்துக்கு வித்தாக விளங்கியவர்கள் 1974 ஜனவரி பத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மரணித்த ஒன்பது தமிழர்கள் அவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.

வேறு வழியின்றி உலகப் பொது அபிப்பிராயத்துக்குப் பணிந்து போகவேண்டிய நிர்ப்பந்தத்தினாலேயே நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற முக்கூட்டரசு உத்தியோகபூர்வமான தனது அனுமதியை வழங்கியது. நாடுகடத்தப்பட்ட தமிழாய்வாளர்களும் மாநாட்டில் கலந்து கொள்ள பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

### இந்திர விழாக் கோலம்

இத்தனை கெடுபிடிகளின் மத்தியிலும் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுத்து வந்த மாநாட்டு அழைப்பாளர்களுக்கு தமிழ்ப் பொது மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் தாராளமாகவே கிடைத்திருந்தன. அந்தத் தமிழுணர்வின் மத்தியில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் நாட்களில் யாழ். நகரை அலங்காரமாக வைத்திருக்கும்படி யாழ் மாநகர ஆணையாளர் ஏ. வி. சுந்தரம் விடுத்திருந்த வேண்டுகோள் மாநகர எல்லைகளையும் தாண்டி யாழ் குடாநாட்டையே இந்திர விழாக் கோலம் பூணும்படி செய்தது.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் பிதாவான அருள்திரு தந்தை தனிநாயக அடிகளாரால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு, ஆய்வு அரங்குகள் அம் மண்டபத்திலும், யாழ் றிமர் மண்டபத்திலும் சிறப்புற நடைபெற, மாநாட்டையொட்டிய தமிழர் பண்பாட்டுப் பொருட்காட்சி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் கலைநிகழ்ச்சிகள் யாழ் திறந்தவெளியரங்கிலும் கோலாகலமாக நடைபெற்றன.

### பண்பாட்டு ஊர்திகள் உலா

எனினும், ஆரம்பத்தில் மாநாட்டுக்கு எதிராகச் செயல்பட்ட பகைமூட்டம் முற்றாக விலகிவிடவில்லை. 1974 ஜனவரி ஒன்பதாம் நாள் இடம்பெற்ற பண்பாட்டு ஊர்திகள் உலாவின் போது, யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆட்சி புரிந்த சங்கிலி மன்னனின் சிலையை எடுத்துப் போகக்கூடாதென்று உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சந்திரசேகரா போட்ட தடையைத் தியாகி பொன் சிவகுமாரன் உட்பட தமிழ் இளைஞர்கள் எதிர்த்து நின்றார்கள் ஊர்திகள் உலா இடம்பெறுவதா

—த. இன்பரசு—

பின் சங்கிலி மன்னனின் சிலையும் அதில் இடம் பெறவேண்டுமென்ற வீர இளைஞர்களின் தீர்க்கமான அறிவித்தலுக்கு சம்பந்தப்பட்டோர் இறுதியில் பணிந்துபோக நேர்ந்தது.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்திருந்த அயல்நாட்டுத் தமிழாய்வாளர்களுக்கு நன்றி தெரிவித்து வழியனுப்பு விழாவொன்றை மாநாட்டின் இறுதிநாளான ஜனவரி 10 ஆம் நாளில் யாழ் திறந்த வெளியரங்கில் நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஏது காரணம் பற்றியோ யாழ் திறந்த வெளியரங்கின் புறவாயில்கள் பூட்டப்பட்டிருந்த காரணத்தினால், வழியனுப்பு விழாவையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலேயே நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் மாநாட்டு அழைப்பாளர்களை எதிர்நோக்கிற்று.

### மரண வீடாகியது

தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்காளர்களாகக் கலந்து கொண்ட அயல் நாட்டுத் தமிழாய்வாளர்களை வழியனுப்பும் விழாவுக்குத் திரண்டு வந்திருந்த ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை வீரசிங்கம் மண்டபத்திற்குள் உள்ளடக்குதல் இயலாது என்ற ஒரே காரணத்தினால் வீரசிங்கம் மண்டப முன்றலில் நிறுவப்பட்ட திடீர் மேடையில் வழியனுப்பு விழா ஆரம்பமாயிற்று.

ஓர் இஸ்லாமிய தமிழாய்வாளரது அருந்தமிழ்ப் பேச்சை, அமைதி காத்து முற்றவெளி மைதானத்தில் அமர்ந்தபடி மாந்திக் கொண்டிருந்த தமிழர் கூட்டத்தின் மத்தியிலே மூர்க்கத்திரம் எதுவும் இல்லாது புகுந்த பொலீசார் நடத்திய குண்டாந்தடியடிப் பிரயோகமும், கண்ணீர்க் [illegible]களது வீச்சும், இழுவிசை மிகைப்பிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் கணப்பொழுதில் மங்களமாக நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழ் விழாவை பச்சைத் தமிழர் ஒன்பதின்மரின் உயிர் பறித்த மரண வீடாக மாற்றியது.

இறந்தவர்கள் ஒன்பதின்மருடன் காயப்பட்டோர், ஆடை நெகிழமானபங்கமுற்றோர் எண்ணிக்கை மிகமிக அதிகம் இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்து எழுந்த தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டதே தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப்போராட்டம் 1974ம் ஆண்டு தை முதல் நாளில் எந்தவொரு தமிழன் வீட்டிலும் பால் பொங்கவில்லை மாறாக தமிழ் மக்களின் உள்ளங்கள் தாம் கொதித்துப் பொங்கின. அந்த எதிர்ப்புணர்வை ஆற்றுப்படுத்தி நெறிப்படுத்தி வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் மக்களின் இப்போதைய விடுதலைப் போராட்டம் விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக, உந்து சக்தியாக இருந்தவை அந்த ஒன்பது தியாகிகளின் உயிரிழப்பு என்றால் மிகையாகாது

### இளையதலைமுறையின் சபதம்

இருந்ததை இழந்ததை மீள்வித்துப் புனரமைத்து — இறைமையுள்ள சுதந்திர சோஷலிச தமிழீழ அரசை அமைப்பதற்குப் புறப்பட்ட விடுதலைப் பயணத்தை தங்குமடங்கே நோக்கித் திசை திருப்புதல் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளாலோ, இன்று ஜனநாயக மனித உரிமைகள் சுதந்திரங்கள் ஒறித்துப் பிரலாபிக்கும் பழைய அராஜகவாதிகளான நியசக்திகளாலோ ஒருபோதும் கைகூடாது என்பதற்கு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளால் மரணித்துப்போன தமிழ்த் தியாகிகள் மீது இளைய தலைமுறைத்தலைமை மேற்கொண்ட சபதமே உத்தரவாதம்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தொடர்பில் ஒரு வார்த்தை கவலைதானும் தெரிவிக்காத ஆட்சியாளர், நீதி விசாரணைக் குழுவை நியமியாததில் வியப்பில்லை.

எனவேதான் யாழ். பொது அலுவல்கள் குழு ஓய்வுபெற்ற நீதியரசர் திரெஸ்ரர் தலைமையில், ஓய்வுபெற்ற நீதியரசர் எஸ். மாணிக்கவாசகர், மற்றும் ஆயர் குலேந்திரனை உள்ளடக்கிய ஒரு பொது விசாரணைக் குழுவை நியமித்தது. அந்த விசாரணைக் குழுவின் அமர்வுகள் யாழ். பாம்கோட் மண்டபத்தில் இடம் பெற்றன. விசாரணைக் குழுவின் அறிக்கை, நடைபெற்ற அனர்த்தங்கள். சம்பவித்த மரணங்களுக்கான முற்றுப் பொறுப்பைப், பொலீசார்மீதே சுமத்தியிருந்தது.

யாழ்ப்பாணப் பொது அலுவல்கள் குழுவினால் அச்சிட்டு வெளியிடப்பட்ட மேற்படி திரெஸ்ரர் விசாரணை அறிக்கையானது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் வி. தருமலிங்கம் கையாண்ட நாடாளுமன்ற நடைமுறைத் தந்திரம் காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கைப் பதிவே (7ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய நிலையில்

## எமக்கு ஆறுதல் தருபவர் வள்ளுவர்

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு மனச்சாந்தியும் அமைதியும், நம்பிக்கையும் தரக்கூடியது ஏதாவதுண்டா என்று ஏங்குபவர்களுக்கு வான்புகழ் வள்ளுவரின் குறள் விடை தருகிறது.

'அல்லற் பட்டாற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'
—குறள்—

கைப்பொருளை இழந்து பூவையும் பொட்டையுமிழந்து, பெற்ற நன் மக்களை இழந்து, பெற்றோர், உற்றோர், உறவினர்களை இழந்து, உடல், உளரீதியாக அல்லற்பட்டு அழுது கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான எமது தமிழ்மக்களுக்கு வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு நிச்சயமாக ஆறுதலைக் கொடுக்கும்.

தெய்வமே பொய்த்து விட்டதா என்றெல்லாம் அல்லலுற்ற மனங்கள் அரற்றுவது கேட்காமலில்லை. ஆனால் அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்ற உண்மையை நாம் மறக்கலாகாது.

அந்தத் தெய்வத்தின் வலிமையை விட பலம் வாய்ந்தது அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர். இதை அறியாத மூட முடியாட்சி, குடியாட்சி ஆளுநர்கள் சிக்கிச் சீரழிந்து போன வரலாற்றை இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் ஏனைய சரித்திர நூல்களும் சான்று பகர்கின்றன.

இக்கால கட்டத்தில் எம்மக்களுக்கு அவைகளெல்லாம் ஓர் ஔஷதமாக விளங்குகின்றன. நாளை என்று ஒன்று உண்டா? நாம் நாளைக்கு இருப்போமா, இல்லையா என்றெல்லாம் பயந்து, நம்பிக்கையிழந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் தமிழ் மக்கள் நிச்சயமாக வள்ளுவரின் வாக்கை நினைவு கூருதல் அவசியமாகும்.

வாழ்க்கைக்கே ஆதாரமாக விளங்கிவரும் திருக்குறள் என்றுமே பொய்த்ததில்லை. இனியும் பொய்யாகாது.

தார்மீக ஆட்சியிலே அதர்மம், அராஜகம் தலைவிரித்தாடலாம். தர்மமே அழிந்து விட்டதோ என்று கூடப்படலாம் ஆனால் பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை அழியாது, பொய்யாது வளர்ந்து சிறப்புற்றோங்கும் அரும் பெரும் செல்வமாகிய திருக்குறளை நாம் சிந்தனைக்கெடுப்பின் எமது துயரெல்லாம் கதிரவனைக் கண்ட பனி போல் மறைந்துவிடும்.

கொடுங்கோன்மையாட்சி எப்படி ஆரம்பத்தில் வளரும், பலம் பெறும், சற்றில் அழிந்தொழியும் என்பதையே பெரும் காவியங்களும், சரித்திர நூல்களும் எடுத்தியம்புகின்றன.

இராமாயணத்தில் இராவணன் மேல் எல்லையில்லா அன்பையும், பக்தியையும் கொண்ட மாரீசன், விபீஷணன் போன்றோர் அவனை அழிவிலிருந்து காப்பாற்றும் ஏக்கத்தினால் பலவாறு ஆலோசனை கூறுகிறார்கள். கேட்டானா இராவணன்? எப்படிக் கேட்பான்? ஆணவம், மமதை அகங்காரம் அவனின் அறிவை மறைத்து விட்டனவே!

அறிவையிழந்தவன், புலன்களுக்கு அடிமையாகி கொடுங்கோன்மைக்கே உதாரணமாகி விட்டான். இது ஏன்? அதர்மமான வழிகளில் அரசன் ஆட்சி நடத்த முற்பட்டால் அதன் விளைவு அவனே அதற்கு இரையாவான் என்பதை எடுத்துக்காட்டவே.

ஹிட்லர் கண்ட முடிவு

ஒரு காலத்தில் ஹிட்லரைக் கண்டு உலகமே மருண்டது ஆனால் இன்று அந்த ஹிட்லரின் முடிவு எப்படியானது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதளவுக்கு சரித்திராசிரியர்களின் ஆராய்ச்சி தொடர்கிறது. அன்று யூதமக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தான். அந்த யூதமக்களின் கண்ணீரே அவனது படையையும், அவனையும் அழித்துவிட்டன.

அதே யூத மக்கள் இன்று தமிழ் மக்களின் கண்ணீரைச் சம்பாதிக்கிறார்கள். கொடுங்கோலனுக்கு ஆதரவாக நின்றும் அது அழிவையே தரும் என்பதனையும் தம் மூதாதையருக்கு உண்டான அதே துன்பத்தையே அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கெதிராக தார்மீக ஆட்சிக்கு துணை போகிறோம் என்பதனை காணும் பொழுது யூதர்கள் மேல் இரக்கமே ஏற்படுகிறது.

ஏனெனில் தமக்கேற் (6 ஆம் பக்கம் பார்க்க)

திருமதி. த. சச்சிதானந்ததேவி

### மண்ணின் குறள்

ஆற்றங்கரை மரமாம்
அரசுத் தொழில் நாடி—சும்மா
வீற்றிருந்து வீணே கழியாதீர் காலத்தை!
கடல் வற்றும் வற்றுமென்று
காத்திருந்து காத்திருந்து
குடல் வற்றிச் செத்த கொக்காகி வாழ்வு
விடிவற்றுப் போனதென
வெம்பி அழும் நிலை வேண்டாம்!

வான்பொழிய வயல் சிறக்க
வளம் குவிக்கும் நிலமிருக்க
ஏன் அடிமை நிலை
ஏக்கம்—சுதந்திரமாய்த்
தான்சேறு அளைந்(து) உழுவன்
தரும்சோறு அவன் உதிரம்
நாம் குடித்து நுளம்புகளாய்
நாட்டில் நோய்வறுமை கூட்டி
வீண்பொழுது போக்கிடில்—பார்
வீடு சுமைதாங்கிடுமா?

ஏன் கையை ஏந்துகிறாய்
வெளிநாட்டில்?—இங்கே
என்ன வளம் இல்லையென்றுன்
கவி பாட்டில்—நிலம்
தானிருக்கத் துயரெதுக்கு எனநோக்கி
நகைக்கிறது நமைபார்த்து வளம் தேக்கி
நெல்லுயர்ந்தால் கோல் உயரும்
உழவு பாரில்
இல்லையெனில் எதுவுமில்லை—திண்ணை தூங்கி
'இலமென்ற [illegible]
நிலமெனும் நல்லாள் நகும்''

-நெடுந்தீவு லக்ஸ்மன்

# கிழக்கை வைத்துக் குழம்புவான் ஏன்?

சுதந்திர இலங்கையின் அரசியற்றிட்டத்தை — சோல்பரி அரசியலமைப்பை — தமிழர் ஏற்றுக் கொள்ளவில்லை. 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேற்படி அரசியலமைப்பை எதிர்த்துப் பிரசாரஞ் செய்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், வடமாகாணத்திலும், திருமலையிலும் பெற்ற வெற்றி, மேற்படி கூற்றை உறுதிப் படுத்துகிறது. தேர்தல் முடிந்தவுடன் அ. இ. த. கா. தலைவர், இலங்கைத் தமிழர்கள் சோல்பரி அரசியலமைப்பை நிராகரித்துவிட்டார்கள் எனக் கூறும் தந்தியைப் பிரித்தானிய வெளி நாட்டுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார்.

இந்திய வம்சாவழித் தமிழரின் உரிமை காரணமாக ஏற்பட்ட பிணக்கினால் அ. இ. த. காங்கிரசிலிருந்து விலகி, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வநாயகம் என்றும் தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் மறந்ததில்லை.

''......இந்திய குடியுரிமைச்சட்டம் இந்திய சமூகத்துக்கு மாத்திரமல்லாது இலங்கையிலுள்ள ஒவ்வொரு சிறுபான்மை இனத்துக்கும் எதிரான பாரதூரமான அநியாயம் என்று நான் சொல்கிறேன்..............'' என 10-12-1948இல் தந்தை செல்வநாயகம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

## முஸ்லிம்கள் சுயநிர்ணயம் செய்யவேண்டும் என்று அப்போதே சொன்னவர் செல்வா!

18-12-1949இல் முஸ்லிம்களின் உரிமை பற்றிக் கூறிய திரு. செல்வநாயகம் பின்வருமாறு குறிப்பிட்டார். '' கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழரசின் பகுதியாக்க வேண்டுமென்றால் தமிழ் மக்களும் தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களும் ஒன்று சேரவேண்டும். எங்களுடைய இயக்கம் முஸ்லிம்கள் வசிக்கும்பகுதிகள், தமிழ் ஈழத்துடன் இணைந்திருக்க வேண்டுமா அல்லது சிங்கள நாட்டுடன் இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லிம்களுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.''

ஆதாரம்.
சுதந்திரன் — 30 03·80

இணைப்பாட்சிக் கோரிக்கையை முன் வைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, 1956 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தலில் போட்டி [illegible]. இம்மாகாணத்தில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட இரு முஸ்லிம்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சிங்களம் மாத்திரம் சட்டத்தை எதிர்த்து, காலிமுகக் கடற்கரையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய போராட்டத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாப் முஸ்தபா பங்குபற்றினார்.

1956 இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசியமாநாட்டில் ஜனாப் முஸ்தபாவும் பங்குபற்றினார். அம்மாநாடு முஸ்லிம்கள் விரும்பினால் வடக்கு, கிழக்கில் அமையவிருக்கும் தமிழரசின் ஓர் அங்கமாக, முஸ்லிம்களுக்கெனத் தனியான அரசொன்றை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்தது.

இந்தச் சூழ்நிலையிலும் த. அ. கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி மாறி ஆளும் சுதந்திரக் கட்சியிற் சேர்ந்தார்கள்.

★ மட்டுவில் ஆ. நடராசா ★

தமிழரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற அரசாங்க உதவியோடு கூடியதிட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களையும் எதிர்த்து வந்திருக்கின்றன. முஸ்லிம் மக்கள் மத்தியில், தமிழரசுக் கட்சி இயங்கிய போதிலும், முஸ்லிம்கள் ஏதோ காரணத்துக்காக, வகுப்புவாதச் சிங்களக் கட்சிகளையே ஆதரித்து வந்தார்கள்

புத்தளம் பள்ளிவாசலில் ஆறு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதையிட்டு விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படி கூட அவர்கள் அரசை வற்புறுத்தவில்லை அவர்கள் சிங்கள அரசுகளுக்கு அவ்வளவு தூரம் ஆதரவளித்தார்கள்— அளிக்கிறார்கள்.

இருந்தும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்திலும் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. அதற்கும் முஸ்லிம் எம்பிக்கள் எதிர்ப்புக் காட்டவில்லை. எனவே அம்பாறைத் தொகுதி சிங்களத் தொகுதியாக மாறியதற்கான பொறுப்பை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்புக்குமத்தியிலும் சிங்களக் குடியேற்றம் நடைபெற்ற. சேருவில என்னும் சிங்களத் தொகுதி உருவாக்கப்பட்டிருக்கிறது மொத்தமாகத் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான மண்ணிலிருந்து இரண்டு சிங்களத் தேர்தல் தொகுதிகளை, சிங்கள அரசுகள் உருவாக்கியிருக்கின்றன.

ஜனாதிபதி கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறைத் தொகுதியைப் பிரித்தெடுத்து, தமிழருக்கும்முஸ்லிம்களுக்கும் சொந்தமான அம் மண்ணைச் சிங்கள மாகாணத்துடன் இணைத்தபின், கிழக்கு மாகாணத்தை ஒரு தமிழ் மாகாணமாக்கும் யோசனையைத் தெரிவித்தார். அப்போது அகப்பட்ட தமிழ் மண்ணைச் சுருட்டிக் கொள்ளுவோம் என அவர் கருதினார். இப்போது அம்பாறையைக் கிழக்கிலிருந்து பிரிக்க மறுக்கிறார். கிழக்கில் இருந்து அம்பாறையைப் பிரித்து விட்டால் கிழக்கு மாகாணம் முழுவதையும் சிங்கள மக்கள் பெரும் பான்மையாக வாழும் மாகாணமாக மாற்றுவதிலிருந்து, தாம் பின் தள்ளப்பட்டு விடுவோமோ என்னும் ஏக்கம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது

அரசியல் கண்ணோட்டம்

இந்நிலையில் ஜனாதிபதியின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ளும் தமிழ்க் குழுக்கள், இனப்பிரச்சினை தொடர்பான இணக்கப் பேச்சுகளின்போது, தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்களை அகற்றும்படி வற்புறுத்துவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எப்படியானாலும் தமிழர் தாயகத்தைப் பறிப்பதையே தனது கொள்கையாகக் கொண்ட ஜனாதிபதி அரசியலமைப்பை பொறுத்த வரையிலும் விடாக்கண்டனாகவே காணப்படுகிறார்.

### முரண்பட்ட நிலை

சோல்பரி அரசியலமைப்பை மாத்திரமன்றி 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்பையோ 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பையோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனாதிபதியோ தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத அரசியலமைப்புக்கு அமைவாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்கிறார்.

இந்த முரண்பாடுகளை எல்லாம் தொகுத்து நோக்கினால்; (1) தமிழ் மக்கள் எதிர்த்தாலும் அவர்களது மண்ணை அபகரித்து அதைத் தன்னினத்துக்குக் கொடுக்க வேண்டும் (2) தமது தாயகம் ஒரு மாநிலமாக அமைய வேண்டுமெனத் தமிழர் விரும்பினால், அதற்கு மாறாக அவர்களுடைய பிரதேசம் பிரிக் (7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதந்தியால் வந்தவினை

### அத்தியாயம் ஒன்பது

இன்றைக்கு எனக்கு என்ன நேர்ந்து விட்டது. இந்த வீட்டில் இப்போது எல்லாரும் தத்தம் மனம் போனபடி நடக்க ஆரம்பித்து விட்டார்களே!

என் சின்ன வயதில்; அப்பா குடித்து விட்டு வந்து வீட்டில் அம்மாவை அடித்து, வாய்க்கு வந்தபடி பேசி ரகளை செய்தது...இப்போதும் ஞாபகம் இருக்கிறது பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு நேற்று அப்பா வீட்டிற்கு வந்த போது, அவரது நடையில் ஒரு மாற்றம் தெரிவதை என்மனது உணர்ந்தது.

மாலை மயங்குகிற நேரம்! வெளி வாசலில் அமர்ந்து கண்ணனுக்கென்று ஒரு சட்டை தைத்துக் கொண்டிருந்தேன் அப்பா தள்ளாடித் தள்ளாடி வந்தார். அவர் கிட்ட வந்தபோது மனதில் விகற்பமில்லாமல் நான் கேட்டேன்.

"என்ன அப்பா! உடம்புக்குச் சுகமில்லையா? நடக்கமுடியாமல் நடந்து வருகிறீர்களே?"

என் கேள்விக்கு அவர் எந்தப் பதிலுமே கூறவில்லை. அவர் திண்ணையில் ஏறக் கஷ்டப்படுவதை உணர்ந்து, அருகில் சென்று அவருக்கு உதவுவோமே என்று எழுந்து சென்றபோது அவர் வாயிலிருந்து வீசிய அந்த நெடி...

எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

அப்பா மது அருந்தி விட்டு வந்திருக்கிறார் எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ஏதோ போதாத காலம் இந்தக் குடும்பத்தைப் பிடித்து ஆட்டுகிறது என்ற எண்ணம் மனதில் எழ, பேசாமல் உள்ளே சென்றேன்.

உள்ளே சென்று கட்டிலில் 'தொப்' பென்று விழுந்த அப்பாவால் கட்டிலில் படுத்திருக்க முடியவில்லை வாயில் வந்தபடியெல்லாம் திட்டிப் பேசிக் கொண்டிருந்தார். அதுவுமில்லாமல் வாந்தி வேறு! அண்டை அயலில் பார்ப்பவர்கள் ஏதாவது நினைப்பார்களே என்ற உணர்வு தலைதூக்க,

எலுமிச்சம் பழரசம் கொடுத்தால் வாந்தி எடுப்பது நிற்குமே என்ற நினைவில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கோப்பையில் கொண்டு போய் "இதைக் குடியுங்கள் அப்பா!" என்றேன்.

"உன் கையால் நான் எதுவும் வாங்கிக் குடிக்க மாட்டேன்" என்றபடி என் கையிலிருந்த கோப்பையையும் தட்டி விட்டார். அது நிலத்தில் விழுந்து உடைந்தது

கோப்பை மட்டுமா உடைந்தது. அப்பாவின் சுடு சொற்களால் எனது மனதுமல்லவா நொருங்கி விட்டது. நிமிர்ந்த அப்பாவின் முகத்தில் கோபக்கனல் தாண்டவமாடியது

யார் மீது கோபப்படுகிறார்? என்மீது கோபப்படும்படியாக நான் எந்தத் தவறும் செய்யவில்லையே? ஒரு வேளை, தங்கச்சி லலிதாவையும் அந்தப் பையனையும் சேர்த்து எங்காவது கடை வீதியில் கண்டிருப்பாரோ? அல்லது அம்மாவுக்கு வியாதி வந்த கவலையில் இப்படிக் கவலையை மறக்கத்தான் குடித்தாரோ? என்று மனது பலவாறு எண்ணிக் குமைகிறது. திடீரென்று அப்பா கோபமாகக் கத்துகிறார்.

"அந்தக் காவாலி தேவன் இந்த வீட்டிற்கு ஏன் அடிக்கடி வருகிறான்?"

என் மனதில் ஏதோ பொறித் தட்டியது ஓ!ஹோ!, அப்பாவின் கோபத்துக்குக் காரணம் தேவனின் வருகை தானோ? அப்படியென்றால், ஒரு வேளை அவன் என்னை நோக்கத்தில் இந்த வீட்டிற்கு அடிக்கடி வருகிறான் என்ற விஷயம் அப்பாவுக்குப் புரிந்து விட்டதோ? இல்லாவிட்டால் அந்த முரடன் தான் நேரிலேயே அப்பாவிடம் ஏதோ பேசி விட்டானோ?...இந்தச் சங்கடமான நிலைமையை எப்படிச் சமாளிப்பது?

என்னைச் சுதாரித்துக் கொண்டு பதில் கூறுகிறேன்

"அவன் காவாலி என்டாலும் மாமாவின் மகன் தானே? சும்மா பொழுது போகாத வேளை இங்கை வருகிறானாக்கும்!"

அப்பா அதே ஆவேச நிலையிலிருந்து கொஞ்சமும் மாறவில்லை, உரத்துக் கத்துகிறார்

"அந்தக் காவாலி இனி இந்த வீட்டிற்கு வரக் கூடாது" என்ன சங்கடமான நிலைமை இது! இருந்தாலும் அப்பா அவனை வாய்க்கொரு தரம் காவாலி, காவாலி என்று கூறுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை

"அவன் இங்கு வருவது உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் அவனிடமே சொல்லி நிற்பாட்டுவதுதானே அதுக்காக அவனை ஏன் காவாலி, காவாலி என்று............




நான் வார்த்தையை முடிக்கவில்லை

அப்பா திடீரென்று படுக்கையிலிருந்து எழுகிறார்.

"ஓ!ஹோ! அவனைக் காவாலி என்டு சொன்னால் உனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகுதோ? நீ அவனுக்குப் பரிஞ்சு கொண்டு நியாயம் பேச வாறியோ? சொல்லிப்போட்டன் இனி அந்தக் காவாலி இந்த வீட்டு வாசல் மிதிச்சால் கொலை தான் விழும்...ஓ..."

எனக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வருகிறது

அப்பா ஏன் இவ்வளவு கோபித்துக் கொள்கிறார். அந்த இடத்தில் நின்றால் என்னையும் மீறி அழுது விடுவேன் போலத்தோன்றுகிறது. உள்ளே போய் விடுகிறேன்

காலையில் இப்படி ஒரு அதிர்ச்சிச் செய்தியை நான் கேள்விப்படுவேன் என்று நான் கனவிலும் கருதவில்லை எவ்வளவு பயங்கரமான பழிச்சொல்! அடுத்த வீட்டுச் செல்லத்துரையருக்கு இரண்டு மகள்மார் நவமணி மூத்தவள். நேசமணி இளையவள் எனக்கு எப்போதுமே நவமணியைக் கண்டாலே பிடிப்பதில்லை. பெரிய அகம்பாவம் பிடித்தவள் நேசமணியோ தமக்கைக்கு எதிர்மாறான குண இயல்பு கொண்டவள். அதனால் நேசமணியை எனக்கு மிகவும் பிடிக்கும். சின்ன வயதிலிருந்தே நானும் நேசமணியும் சிநேகிதிகளும் கூட. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் என்னோடு கதைத்துப் பொழுது போக்குபவள்.

தமக்கை நவமணியோ கல்யாணம் செய்து கணவரோடு இருக்கிறாள். நேசமணிக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. நேற்றைக்கு அப்பாவுடன் வாக்குவாதப் பட்டதில் என் மனது ஓரேயடியாகக் குழம்பிப் போயிருந்தது. இன்றைக்குக் காலையில் - ஞாயிற்றுக்கிழமை - விடுமுறை நாளானதாலும் காலையில் நேசமணியைக் கண்ட போது மனதில் ஒரு அமைதி தோன்றுவது போல உணர்ந்தேன்

என் மனதின் பாரங்களை யாரிடமாவது வாய் விட்டுக் கூறினால்தான் மனது கொஞ்சம் ஆறுதலடையும் என்று தோன்றியது.

ஆனால் கதையினூடே தயங்கித் தயங்கி அவள் சொன்ன அந்தச் செய்தி ... அப்பப்பா!... எவ்வளவு பயங்கரமான செய்தி... அதைக் கேட்டும் இன்னும் என் நெஞ்சம் வெடித்துவிடவில்லையே!

இப்போதுதான் முதல்

> ....கோப்பை மட்டுமா உடைந்தது? அப்பாவின் சுடு சொற்களால் எனது மனதும் சேர்ந்து உடைந்து விட்டதே!....

நான் அப்பா குடித்து விட்டு வந்து பேசிய பேச்சின் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

எவ்வளவு ஒரு பெரும் பழி என்மீது?

இந்த நவமணிக்கு இதயம் என்பதே இல்லையே!

தேவன் எனக்கு உடன் பிறக்காவிட்டாலும் மனதால் அவன் எனக்குத் தம்பி, அவனையும் என்னையும் இணைத்து, அவன் என்னைச் சந்திக்கத்தான் அடிக்கடி இங்கு வருவதாகக் கதைகட்டி, அதற்குக் காதும் மூக்கும் வைத்து இந்த ஊரில் உலாவ விட்டிருக்கிறாளே இந்த நவமணி.

அது எப்படியோ அப்பாவின் காதுக்கும் எட்டியிருக்கிறது. அந்தக் கசப்பான செய்தியை ஜீரணிக்க முடியாமல்தான் அப்பா தன்னை மறக்க மது அருந்தியிருக்கிறார்

என் நிலைமையைக் கண்டு சகிக்கமுடியாத நேசமணி எனக்கு ஏதோவெல்லாம் ஆறுதல் கூறினாள் "இதோ பார் சாந்தி! அக்காவின் குணம் உனக்குத் தெரிந்தது தானே? அவவுக்கு எப்போதுமே அடுத்தவர்கள் மீது குறைகண்டு பல விதமாய்க் கதைக்கத் தெரியும்.

ஆனால் சொந்தப் புருஷனை - அத்தானை அவள் படுத்துகிற பாடு ஊருக்குத் தெரியும்"

நேசமணியின் ஆறுதல் வார்த்தைகள் எதுவும் எனக்கு அமைதியைத் தரவில்லை.

நேசமணி விடைபெற்றுக் கொண்டு போனதுக்குப்பிறகு எனக்கு அழுகை அழுகையாக வருகிறது? ஏழை என்று விட்டால் எப்படியும் பேசி விடலாமா?

இந்தச் சமூகம், மனிதர்கள், உலகத்தின் மீதே வெறுப்பு வருகிறது மற்றவர்கள்தான் ஏதோ நரம்பில்லாத நாக்கால் இப்படிக் கதைத்தார்களென்றால் அதைக் கேள்விப்பட்ட அப்பாவின் மனதிலுமா என்னைப் பற்றி இப்படி ஒரு சந்தேகம் எழவேண்டும்! அப்படியில்லாவிட்டால் அவர் ஏன் இப்படி என் மீது கோபிக்கவேண்டும்?

இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது எனக்கு உயிரோடு ஏன் இருக்கவேண்டும் என்ற எண்ணம் தலைதூக்குகின்றது.

ஏதாவது விஷத்தைக் குடித்து உயிரைப் போக்கிக் கொண்டால் இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கண்டு விடலாம். நான் உயிரோடு இருந்துதான் என்ன சுகத்தைக் கண்டேன்?

யாரோ வெளிப்படலையைத் திறக்கின்ற சத்தம் கேட்கிறது. இந்த வீட்டு வாசற்படியை மிதிக்கக் கூடாதென்று (6 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னவனின் வெற்றி உலா
# மக்களுக்கு உவகை விழா

## தண்ணீர்ப் பந்தல்களில் பாற்கஞ்சியும் பாணிப்பனாட்டும்

கூழங்கைச் சக்கரவர்த்தி சுகம் பெற்றெழுந்த பின்னர் கைலாய பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் கைலாயநாதர் கோயிலையும், கைலாய நாயகியம்மன் கோயிலையும் சிறந்த முறையில் கட்டுவித்து உக்கிராண சாலை, பாகசாலை, அக்கிரகாரமடம், தேரோடும்வீதி, அன்ன சத்திரம், சுற்றுமதில், கோபுரம் யாவற்றையும் உருவாக்கி முடித்தான். மேலும் கைலாயநாதர் கோவில், கேணி, குளங்களையும் கட்டுவித்து ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் நல்லூர் கயிலையமலர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தை நல்லாட்சி புரிந்த கூழங்கைச் சக்கரவர்த்தி தன் மகன் குலசேகர சிங்கையாரியனுக்கு முடி சூட்டி வைத்த பின் வயோதி

> **பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டுமோதிய நல்லூர் அரசு**
> **(பகுதி : பதின்நான்கு - ஆ)**

கோவிலுக்காக இராமநாத புரத்தையாண்ட சேதுபதிக்கு பாசுரமனுப்பி ஒதாரத்திலே பூசிக்கப்பட்ட ஆதாரலிங்கத்தை வரவழைத்து பாண்டிய மன்னனைக் கொண்டு பிரதிஷ்டை செய்வித்தான்.

இவ்வாறு இளம் வயதில் அரசு பீடமேறி நல்லூர் அரண்மனையையும் களும் இறந்தான்

கூழங்கைச் சக்கரவர்த்தி வம்சத்தின் வாரிசுதான் சங்கிலி மன்னன்.

### ஆலய தரிசனம்

பட்டுப் பீதாம்பரம் உடுத்து பரிமள தைலம் கமழ உப்பரிகையிலிருந்து இறங்கிவந்த சங்கிலி மன்னனும் ராணி பெரிய நாச்சியாரும் சிவிகையில் ஏறிக்கொண்டனர். பல படை பெருப்புகளைக் கண்டும் தலைகுனியாது வணங்கா முடியாகத் திகழும் வெற்றி மாளிகையாம் நல்லூர் அரண்மனையிலிருந்து வெற்றி வேந்தனும் ராணியும் சுவாமி தரிசனத்துக்காக ஆலயம் புறப்படுகின்றனர்.

வெற்றிவிழா நாளாகையால் காலையில் எல்லா ஆலயங்களுக்கும் செல்வதென அரசனும் அரசியும் தீர்மானித்திருந்தனர்.

இரு குதிரை வீரர்கள் முன்னே மெதுவாகச் செல்ல பின்னால் அரச தம்பதியினரின் சிவிகை சென்றுகொண்டிருக்கிறது.

சிவிகை என்பது பல்லக்கு போன்ற மூடு திரையிட்ட அலங்கார இருக்கை அரச குடும்பத்தினர் பயணம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனம். அதை நால்வர் தூக்கிச் செல்வர். அதில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதைத் தூக்கிச் செல்பவர்களின் எண்ணிக்கையும் எண்மர், பன்னிருவர் என கூடும்.

சிவிகை தூக்குபவர்கள் சிவிகையர் என அழைக்கப்பட்டனர். அரச குடும்பத்தினருக்கு இவர்களின் சேவை அத்தியாவசியமானதால் அரண்மனைக்கு அண்மையாகவே இவர்களும் தம் இருப்பிடங்களைக் கொண்டு வாழ்ந்தனர்

ம. க. அ. அந்தனிசில்

சிவிகையர் என்ற சொல் பின்னர் 'சிவியார்' என உருமாறிற்று

ஆலய மணி ஒலிக்கத் தொடங்குகிறது... முத (6 ஆம் பக்கம் பார்க்க)

# தியாக மாமலை மறைந்ததும்
# இளைஞர்களின் தீவிரம் வளர்ந்தது

அத்தியாயம் நான்கு

தலைகளில் கதர்த் தொப்பி கைகளில் கறுப்புக்கொடி. கருத்தில் விடுதலை எண்ணம் வீறு கொண்டெழுந்த மக்கள் கூட்டம்.

'சைமன் கமிஷனே திரும்பிப் போ' என்ற கோஷத்துடன் பெரிய பேரணியொன்று புறப்பட்டது அதற்கு லாலா லஜபதிராய் அவர்கள் தலைமை வகித்தார். ஊர்வலத்தைத் துப்பாக்கி ஏந்தியோர் தாக்க முற்பட்டனர்.

இனம் இனத்தைத் தாக்கியது

எங்கும் அல்லோல கல்லோலம்; அவலக் குரல்கள். தொண்டர்கள் படுகாயமுற்றனர். லாலா லஜபதிராயும் பலமாக அடிபட்டார் வெள்ளைக்கார ஸ்கொட் வெறியாட்டத்தால், அவன் ஆணையால் சுதந்திர சிங்கம் நோய்வாய்ப்பட்டார்.

தடியடியால் நோய் வாய்ப்பட்ட பாஞ்சாலச் சிங்கம் 1928 நவம்பர் 18 ந் திகதி அமரரானார். இத் தியாக மாமலை இறந்த செய்தி காட்டுத் தீ போல் பரவவே மக்கள் ஆங்காங்கே திரண்டு வந்து கண்ணீர் சிந்தினர், அனைத்துக் கடைகள் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டன.

இவரின் மரணத்தால் நாடு கொந்தளித்தது.

**இரத்தம் கொதித்தது**

பகத்சிங்கும் தோழர்களும் குருதி கொதித்து வீறு கொண்டெழுந்தவர். நாட்டை விட்டு

### பகத்சிங் வீரவரலாறு

வெள்ளையனை விரட்டத் திட்டம் பல தீட்டினர் இரகசிய திட்டத்தை செயலாக்கச் சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தனர். புரட்சி இளைஞர்கள் ஆங்காங்கே தங்கள் திட்டங்களை நிறைவேற்ற இரகசியமாக இயங்கினர்

எங்கும் இச்சம்பவத்தின் பின் மயான அமைதி காணப்பட்டது சட்டசபை என்ன செய்ய போகிறது என்று மக்கள் அங்கலாய்த்தனர்? பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற பிரமையில் மூத்த தலைவர்கள் முடங்கிக் கிடந்தனர். விடுதலைக் கட்சி ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசம் பேசி சமாதானமாக வாழவே விரும்பியது.

மூத்த தலைவர்களின் மிதவாதப் போக்கை இளைஞர்கள் கண்டித்தனர். புதிய சக்தியுடன் சுதந்திரம் பெற மாணவர்கள், இளைஞர்கள் தயாராகினர்.

பட்டப்பகலிலே பல நூறு பாரத மாதாவின் புதல்வர்கள் எதிரிலே மரியாதைக்குரிய தலைவர் லாலாஜீ அடிபட்டு மூர்ச்சித்து விழுந்தது. அவர் மாண்டது மக்களை வீறு கொண்டெழச் செய்தது.

பகத்சிங் இவரது மரணத்தால் துவண்டு தன்

புத்தொளி

தோழர்களைத் தயார்ப்படுத்தினான். அப்போது அவனது தோழன் ஆஸாத் சொன்னான் —

**வீரபாஷை**

பகத்சிங் நமக்கென்றொரு பாஷை இருக்கின்றதே! அந்த அற்புத பாஷையால் பதில் தருவோம் பதுங்கிப் பதுங்கிப் பல வருடமாக வாழ்கிறோமே! ஏன்? உயிருக்கு ஆபத்து வருமென்று? இப்போதும் எப்போதும் தாக்கு மறத்துக்குரியவராகதான் இருக்கிறோம். எனவே எமது வீரபாஷையிலே பதில் சொல்வோம்.

ஸ்கொட்! ஸ்கொட்! சீனியர் சுப்பிரின்டன் அப் பொலீஸ்! அமைதியான மக்கள் மீது அடக்குமுறையை ஏவிய கொடியவன் லாலாஜியைத் தடியால் அடித்த அரக்கன்.

இப்படி வாய் குமுறினான் பகத்சிங்

ஆஸாத் குறுக்கிட்டான். போதும் பகத்சிங்! பேசியது போதும். இதோ திட்டம். எல்லோரும் கவனமாகக் கேளுங்கள் பிற்பகலில் அவன் வெளியே வருவதைக் கவனிக்க வேண்டும். லாலாஜி மரணமடைந்த திகதி முக்கியமானது இதோ வரைபடம் இது பொலீஸ் நிலையம் இது டி. ஏ. வி. கலேஜ் நமக்கு மிகவும் வசதியான இடம் இத்திட்டம் நிறைவேற்ற (6 ஆம் பக்கம் பார்க்க)

# உலகத்தமிழ் மாநாடு அன்றே உதயமானது;
# தேனளாவிய சொற்களால் வானளாவிய புகழ்

கலாநிலையத்தின் தலைவர் நடேசபிள்ளை அவர்கள், கலாநிலையத்தின் ஆக்கப்பணிகளுக்கு இரு நாடுகளின் புலவர்களைச் சிறப்பாகவும், தமிழ் கூறும் நல்லுலகத்தவரைப் பொதுவாகவும் அன்புக்குரலில் அழைக்கவியமைத்துக் கூறினார்—

**கவிநலமும் கலைநலமும்**

'தமிழகம் யாண்டுமுள்ள தமிழ்ப் புலவீர் எல்லீரும் வம்மின்! தமிழ்த் தெய்வத்தக்குரிய பணிகள் பல செய்வதற்கு வாய்த்த தருணம் இது வென்றுணர்வீர் தமிழ் மக்கள் தம்மொழி பயிலாது, அதனைப் புறக்கணித்து அயர்ந்த இருள் கூரியாமம் கழிகின்றது.

பரத கண்டமெங்கும் பரந்திருந்த மாயப்படலம் சிறிதுசிறிதாக மறைகிறது. ஆங்காங்கு கவிநலமும் கலைநலமும் புத்துயிர் பெற்று புதுமணம் கமழ்கின்றது

தொன்மையாலும், பிறமொழித் துணையின்றித் தானேயியங்குந் தன்மையாலும், இலக்கண அமைதியாலும் இலக்கிய உயர்ச்சியாலும் தமிழ்மொழி இக்

> **பண்டிதமணி**
> **வரலாறும் காலமும்**

காலத்து வழங்கும் ஏனைய இந்தியமொழிகள் [illegible] லாவற்றிலும் சிறந்தது என்பது ஒருதலை. தமிழ்த் தெய்வத்துக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார் இக்காலத் [illegible] தமிழ்த் தெய்வம் துயிலெழுந்து திருவருள் புரியுங் காலம் அணித்தாயது.

சங்கப் புலவர் காலத்திலும், சமயாசாரியர் காலத்திலும் திருவோலக்கங் கொண்டு வீற்றிருந்த தமிழ்த் தெய்வம் மீண்டும் திருவோலக்கம் கொள்கின்ற காலம் [illegible] முத்தமிழ்ப் புலவீர்காள் வம்மின! விசித்திர வன்னங்களுடன் அலர்ந்த மலர்கள் போன்ற

க.சி.குலரத்தினம்

கவிகளைக் கொணர்மின், பொருள் பொதிந்த கட்டுரைகளைக் கொணர்மின். புதுச்சாத்திரங்களைக் கொணர்மின்; பழஞ் சரிதங்களைக் கொணர்மின், வேற்று மொழிப் பன்மலர்த் தெரியல்களைக் கொணர்மின், தெய்வத்துள்ளங் கவரும் திவ்ய இசைப் பாக்களை ஓதுமின்.

ஓவியர்களே, சிற்பியர்களே நீவிரும் வம்மின். தமிழ்த் தெய்வத்துக்குப் புதுக்கோட்டங்களை அமைமின்.

தமிழ் வீரர்களே! வேளைக்காரப் படைகளாக அணிவகுமின்.

தமிழ்ப் புலவர்களே! நீவிர் முன்னணி புகுமின். நாமே இவ்வுலகத்தை நடத்துகின்றோம்''.

இவ்வாறு தமிழ்ப்பேசும் உலகத்தவரைத் தேனளாவிய சொற்களால் வானளாவிப் புகழ்ந்து போற்றிவரவேற்ற நடேசன் அவர்கள் இனிய (6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதையை எழுதுவதே கஷ்டம்: மரபுக் கவிதை சுலபம்

## கவிஞர் மேத்தா கருத்து

"தமிழுக்கும் தமிழனுக்கும் உரிய உரிமைகளும் மரியாதைகளும் கிடைக்கும் வரை என் குரல் தமிழரைப்பற்றியே ஒலிக்கும்" என்று சொன்னார் கவிஞர் மு. மேத்தா

இந்த ஆண்டு தமிழக அரசின் "பாரதிதாசன் விருது" பெற்றவர் கவிஞர் மேத்தா

பாவேந்தன் பாரதிதாசன் நினைவாக ரூபா பத்தாயிரம் ரொக்கமும் நான்கு பவுனில் தங்கப் பதக்கமும் பரிசாக அளிக்கப்படும்.

"பாரதிதாசன் விருது" பெற்ற மேத்தாவுக்கு வயது 41.

மேத்தா நான்காம் வகுப்புப் படிக்கும் பொழுது கவிதை எழுதத் தொடங்கினார் 5ஆம் வகுப்பில் மேடையேறிப் பேசினார் 7ஆம் வகுப்பு படிக்கும் பொழுது, கையெழுத்துப் பத்திரிகை நடத்தினார்.

இப்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இதுவரை 19 நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'கண்ணீர்ப் பூக்கள்' என்ற புதுக்கவிதைத் தொகுதி 12 பதிப்புகள் வெளிவந்தன.

புதுக்கவிதைக்கு அறிஞர் பெருமக்களிடமும் பல்கலைக்கழகங்களிடமும் அங்கீகாரம் பெற்றுத் தந்தவர் மேத்தாதான்! இவர் எழுதிய "கண்ணீர்ப் பூக்கள்", "ஊர்வலம்" ஆகிய நூல்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பாடமாக உள்ளன.

மேத்தா இப்பொழுது திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதி வருகிறார்!

திரு மேத்தா தமிழகத்தில் இருந்து வெளிவரும் "ராணி" வார இதழுக்கு அளித்த பேட்டி இது

தொகுத்துத் தருபவர்; க. கணேஷ்

கேள்வி;- பாரதியின் கவிதைக்கும் பாரதிதாசன் கவிதைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மேத்தா:- தேசிய விடுதலைப் போராட்டத்தை முதல் கருப்பொருளாகக் கொண்டு கவிதைகளைப் படைத்தார் பாரதி

தமிழன் - தமிழ் இன உணர்வை, முதன்மைப் படுத்தப்பட்ட கருப்பொருளாகக் கொண்டு கவிதைகளைப் படைத்தார் பாரதிதாசன்.

பாரதியின் கவிதைகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய கீதம் போலத் திகழ்ந்தன.

பாரதிதாசன் கவிதைகள், திராவிட இயக்கத்தின் தேசிய கீதமாக இருந்தது

கேள்வி:- பாரதியின் கவிதைகளை விட, பாரதிதாசன் கவிதை நூல்கள் மக்களிடம் அதிகம் பரவியதாகச் சொல்லப்படுகிறதே, சரியா?

மேத்தா: பாரதி காலத்தை விட, பாரதிதாசன் காலத்தில் கவிதை படிப்பவர்கள் பெருகினார்கள். அதனால் புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கம் பத்தாவிற்பனை இரண்டும் பாரதிக்குக் கிடைத்ததை விட பாரதிதாசனுக்குக் கிடைத்தது அதிகம் என்று சொல்லலாம்.

கேள்வி:- புதுக்கவிதைகளின் இன்றைய வளர்ச்சி எப்படி இருக்கிறது?

மேத்தா:- தமிழ்க் கவிதைகளின் உள்ளடக்கத்தை மாற்றி, தமிழ்க் கவிதைகளுக்கு ஒரு வேகத்தையும், வீரியத்தையும் கொடுப்பது புதுக்கவிதை.

பாரதியும் பாரதிதாசனும் பண்டிதர்களுக்கு மத்தியில் இருந்த கவிதையை மக்களுக்கு பொதுவுடைமை ஆக்கினார்கள்.

ஆனாலும் கவிதை என்பது இலக்கணம் அறிந்தவர்களுக்கு மட்டும்தான் என்ற கட்டுப்பாடு இருந்தது

பல கட்டுப்பாடுகளை தகர்த்து, இலக்கணம் அறியாதவர்களும் கவிதை எழுதுகிற தகுதியை புதுக்கவிதை கொடுத்துள்ளது

இப்பொழுது புதுக்கவிதை என்ற பயிருக்கு நடுவில் களைகளும் வளர்கின்றன.

இதனால் புதுக்கவிதை தேங்கிவிட்டது என்றும், புதுக்கவிதை செத்து விட்டது என்றும் சிலபேர் புலம்பத் தொடங்கி இருக்கிறார்கள்.

என்னைப் போன்றவர்கள், இந்தப் புதுக்கவிதை தனது வீரியத்தை இழந்து விடக்கூடாது என்பதால், அதை எழுதுகிற இளைஞர்களிடம் கொஞ்சம் கண்டிப்புக் காட்டத் தொடங்கி இருக்கிறோம் இதனால் எதிர்ப்புக்கும் ஆளாகி வருகிறோம்

மரபுக் கவிதை எழுதுவதை விட, புதுக்கவிதை எழுதுவது கடினமானது ஏனென்றால் மரபுக் கவிதைக்கு ஒரு வடிவம் — ஒழுங்கு உண்டு

ஆனால் புதுக்கவிதை, தனது அற்புதமான கற்பனையாலோ ஆழமான கருத்தோட்டத்தாலோ உள்ளார்ந்த உணர்ச்சியினாலோ மட்டுமே தன்னை கவிதை என்று காட்டிக் கொள்ளமுடியும்.

கேள்வி:- இன்றைய தமிழ்க் கவிதைகள் பிறமொழிக் கவிதைகளுடன் போட்டியிடும் அளவுக்கு வளர்ந்து உள்ளனவா?

மேத்தா: உலகத்தின் எந்த மொழிக்கும் இளைக்காமல் — இன்னும் சொல்லப் போனால், பிறமொழிகளை விட சிறப்பாகவே தமிழில் கவிதைகள் வந்து கொண்டிருக்கின்றன

ஆனால் அடாவடித்தனமான அறிவாளிகளும், இன்றைய தமிழ்க்கவிதைகளை ஏற்றுக் கொள்வதைக் கூட தங்களது அந்தஸ்துக்குக் குறைவானது என்று நினைப்பவர்களும், ஆங்கிலத்தில் சிந்திப்பதையே நாகரிகமாக கருதுகின்றார்கள்.

### தமிழ் உணர்வு

கேள்வி:- தேசிய உணர்வில் இருந்த நீங்கள், இப்பொழுது தமிழ் உணர்வுடன் சிந்திப்பதாக — எழுதுவதாகக் கூறப்படுகிறதே உண்மையா?

மேத்தா: உண்மைதான். தேசிய உணர்வும் தமிழ் உணர்வும் வேறு வேறானவை அல்ல," திருவிழாவில் ஒரு தெருப் பாடகன்" என்ற எனது கவிதை தொகுதிக்குமுன், எனது குரல்கள் இந்தியா — இந்திய மக்கள் என்பதைப் பற்றியே இருந்தன

இந்தக் கவிதைத் தொகுதியில், எனது குரலில் ஒரு மாற்றம் இருப்பதை வாசகர்கள் உணர்ந்தார்கள் இன்றைக்கு இந்தியா தேசம் என்று பேசிப் பேசி எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டதை வருத்தத்தோடு நினைவுபடுத்திக் கொள்ள நேர்ந்துள்ளது

இந்தியாவைப் பற்றிப் பேசியதால், தமிழை மறந்துவிட்ட தமிழர்களுக்கு, அவர்களையே அவர்களுக்கு நினைவு படுத்த வேண்டிய அவசியம் உண்டாகி இருக்கின்றது

தமிழன் புறக்கணிக்கப்படுகின்றான்; தமிழன் ஒதுக்கப்படுகிறான்; தமிழன் பக்கத்து நாடுகளில் அடிக்கப்படுகிறான் இந்தப் பெரிய துணைக்கண்டம், ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழனை நடத்துகிறது.

எனவே தமிழுக்கு — தமிழனுக்கு உரிய சம உரிமைகளும் மரியாதைகளும் கிடைக்கும் வரை நாங்கள் தமிழைப் பற்றிப் பேசுவது கடமையாகிறது.

இந்தியா எங்களிடம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### நூலகங்கள் என்னாச்சு?

தம்பி,

யாழ். பொதுசன நூல்நிலையம் தீயவர்களால் தீயிடப்பட்டபின் அதன் கிளைகள் பல இன்று தோன்றியுள்ளதாக எழுதியிருந்தாய்! நல்ல முயற்சி! அவற்றைப் பயன்படுத்துவோர் தொகையும் வகையும் அதிகரித்துள்ளதா?

'சிறு வயதிலேயே பாட நூல்கள் தவிர்ந்த அறிவு நூல்களை வாசிக்கப் பழக்க வேண்டும்; பெற்றோர் வழிகாட்ட வேண்டும்; வயதுக்குத் தகுந்த நூல்கள் எவை — அறிவுக்கேற்ற பயனுள்ள நூல்கள் எவை—என ஆசிரியர்கள் ஆலோசனை வழங்கவேண்டும்!"— வாயினிக்கப் பேசுகிறார்கள்; பேசுபவர்கள் குடிக்கும் சோடாவும் வாயுவும் வயிற்றுக்குச் செல்லுமுன்பே மறந்து விடுகிறோம்; செயற்படுத்தத் தவறி விடுகிறோம்!

சில பெரிய பாடசாலைகளைத் தவிர, எத்தனை பாடசாலைகளில் நூலகங்கள் உள்ளன? பெரிய பாடசாலைகளிலும் பயன்படுத்துவோர் தொகை என்ன? 'எப்போ மணியடிக்கும்?— டியூசனுக்கு ஓடவேண்டும்!" எனத் துடிக்கும் மாணவர்களையே காண்கிறோம்! நூலகங்களுக்குச் சென்று படிக்கும் மாணவர்களைப் பார்க்கிறோமா?

பாடத்திட்டம் எப்படியாயினும் முடிக்க வேண்டும் என்ற வட்டத்திற்குள் நின்று, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுதானே நடைபெறுகின்றது!

இடவசதி இல்லை; நிதி வசதி இல்லை; மாணவர்களுக்கு ஆர்வமில்லை; பாடப் பகுதியையே படித்து முடிக்க நேரமில்லாத மாணவர்களுக்குப் பிற நூல்களையும் திணிக்கலாமா?— இப்படியெல்லாம் சாட்டுப்போக்குகள்!

அறநூல்கள் சில—அறிவாளர் கதைநூல்கள் சில—விஞ்ஞானப் புதுமைகள் விளக்கும் நூல்கள் சில; ஒவ்வொரு மாணவனும் பத்து நூல்களையாயினும் வாசிக்க வழிகாட்டி விடுக வேண்!

திரியைக் கொளுத்திவிட்டால், தம்பி விளக்குத் தானாகவே எரியும்!

அன்புடன்
—சிவா—

# பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

### புதிய தந்திரம்

போதைப் பொருள்களைக் கடத்துவதற்கு கடத்தல்க்காரர்கள் புதிய தந்திரங்களைக் கையாளுகிறார்கள்.

தாய்லாந்து மலேசியா எல்லைகளில் அன்னை தெரேசா உருவம் கொண்ட பொம்மைகளுக்குள் போதைப் பொருள்கள் கடத்தப் படுவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ✱

### நாய்கள் ஜாக்கிரதை

1983 ஆம் ஆண்டு 2942 பேர்;

1984 ஆம் ஆண்டு 3946 பேர்;

1985 ஆம் ஆண்டு 3183 பேர்

இவையெல்லாம் என்ன?

பிரிட்டனில் நாய்களால் கடிக்கப்பட்ட தபால்காரர்களின் எண்ணிக்கை. ✱

### நாடகம் ஒன்றின் 36 வருட சாதனை!

அகதா கிறிஸ்டியின் புகழ்பெற்ற 'மவுஸ் ட்ராப்' நாடகம்தொடர்ந்து 36 வருடங்களுக்கு மேலாக இன்னும் லண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

43 நாடுகளில் 23 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தின் இன்னொரு சிறப்பு: காந்தி படத்தை இயக்கிய ரிச்சர்ட் ஆட்டன்பரோ இந்த நாடகம் அரங்கேறியபோது அதில் நடித்தவர்

இந்த நாடகம் நடைபெறும் அரங்கவாசலில் தயவு செய்து இந்த நாடக முடிவை யாரிடமும் சொல்லாதீர்கள் என்ற அறிவிப்பு காணப் படுகின்றது. தினசரி இரண்டு காட்சிகளுடன் இன்றும் 'ஹவுஸ்புல்' ஆகவே இந்த நாடகம் நடைபெறுவதும் நாடக வரலாற்றில் ஓர் அதிசயம்தான். ✱

### நாக்கு

ஒரு மனிதனிடம் மிகச் சிறந்தது எது? என அறிஞர் ஒருவரிடம் கேட்கப் பட்டது.

நாக்கு எனப் பதிலளித்தார்

மிகக் கேவலமானது எது? என மீண்டும் அவரிடம் கேட்கப்பட்டது.

நாக்கு என்பதுதான் பதிலாகியது

ஒரு மனிதன் தனது நாக்கை எப்படிப் பயன்படுத்துகின்றானோ அதைப் பொறுத்தே அவன் பெருமையும் சிறுமையும் அடைகின்றான்.

அதனால்தான் இரண்டு கேள்விகளுக்கும் நாக்குத்தான் பதில் என்றார்! ✱

### சுயசம்பாத்திய கோடீஸ்வரிகள்

பெண்கள் பெரும் சொத்துக்களுக்கு அதிபதிகளாக இருப்பது அபூர்வமான விஷயமல்ல ஆனால் தாமே சுயமாகச் சம்பாதித்து, மெல்ல மெல்ல உயர்ந்து பெரும் பணம் சேர்த்துக்கோடீஸ்வரி என்ற நிலைமைக்குப் பெண்கள் வருவது மிகக் கடினமான - பாராட்டுதலுக்கு உரிய செயல்.

ஒன்றுமே இல்லாத சாதாரணக் குடும்பத்தில் பிறந்து தன் திறமையால் சம்பாதித்து சமூகத்தில் பெரும் அந்தஸ்தைப் பெற்றிருப்பவர்கள் இந்தியாவில் பலர்.

அவர்களுள் பிரபல ஹிந்தி பின்னணிப்பாடகி லதாமங்கேஷ்கரும் தமிழ் சினிமா நடிகை ஸ்ரீதேவியும் அடங்குவர். ✱

### சுட்டிப் பயலே. .

சின்னப் பயலே சுட்டிப்பயலே
நீ குறும்புகள் செய்யாதே
தட்டித் தடக்கி, விழுந்து எழுந்து
விளைகளைத் தேடாதே
குட்டி மான் போல் துள்ளித் திரிந்து
குறும்புகள் செய்யாதே
அடக்கமாக இருந்து விட்டால் தான்
பாரினில் உயர்ச்சியடா
அம்மா அப்பா சொல்வதைக் கேட்டு
ஒழுங்காய் வாழ்ந்து விடு
அம்மா அப்பா பாரினில் தெய்வம்
அதுவும் மறவாதே
ஆமைக் கதைகள் நரியின் கதைகள்
அழகுறக் கூறிவிடும்
அந்த குருவின் மீது பக்தி கொண்டு
அழகுறக் கற்று விடு
கற்றுக் கற்று உயர்வது தாண்டா
உண்மை உயர்ச்சியடா
கற்ற கல்வியாலே தாண்டா எம்
தமிழினம் தழைக்குமடா
வீரனாக உறுதியாகப் பாரினில்
நீயும் வாழ்ந்து விடு
அவ் வீரம் ஒன்றே இன்று வேண்டும்
அதுவும் மறவாதே!

த. சிவநேசன்
வறுத்தலை விளான்
தெல்லிப்பழை.



### பண்பான பழமொழிகள்

✱ பதறாத காரியம் சிதறாது (அமைதியின் வெற்றி)

✱ நிறைகுடம் தளம்பாது(அறிவின் அடக்கம்)

✱ பாடின்றிப் பட்டம் இல்லை (முயற்சியும் உயர்ச்சியும்)

✱ இளங்கன்று பயமறியாது (வாலிபத் துணிவு)

✱ இளமையிற் கல்வி சிலையில் எழுத்து (இளமையின் சிறப்பு)

✱ பார்த்தாற் பசு பாய்ந்தாற் புலி. (வேஷம்)

✱ பெண்ணென்றால் பேயும் இரங்கும். (பெண்மையின் மென்மை)

✱ மனமுண்டானால் இடமுண்டு. (விருப்பமே வெற்றி)

✱ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். (திறமையின் உயர்வு)

✱ புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? (தன்மான உணர்ச்சி)

### சில நாடுகளும் தலைநகர்களும்

| | | |
|---|---|---|
| ஜோர்டான் | — | அம்மான் |
| இஸ்ரவேல் | — | டெல் அவிவ் |
| தென்னாபிரிக்கா | — | கேப்டவுன் |
| இந்தோனேசியா | — | ஜகர்த்தா |
| ரஷ்யா | — | மொஸ்கோ |
| அவுஸ்ரேலியா | — | கன்பரா |
| ஆப்கானிஸ்தான் | — | காபூல் |
| சிரியா | — | டமாஸ்கஸ் |
| துருக்கி | — | அங்காரா |
| போலந்து | — | வார்சோ |
| நோர்வே | — | ஒஸ்லோ |
| ஸ்பெயின் | — | மட்றிட் |
| சைப்பிரஸ் | — | நிக்கோசியா |
| கிறீஸ் | — | எதென்ஸ் |
| கனடா | — | ஒட்டவா |
| உகண்டா | — | கம்பாலா |
| லிபியா | — | திரிப்போலி |
| சம்பியா | — | லுசாக்கா |
| ஆர்ஜன்டீனா | — | புவனர்ஸ் அயர்ஸ் |
| வெனிசுலா | — | கராகாஸ் |

- செல்வி. தயாளினி அம்சதேவா
(யாழ். இந்து மகளிர் கல்லூரி )

## ஞான சஞ்சீவி

### சிருஷ்டியும் பிரளயமும்

ஆகாசத்தையும் பிராணனையும் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பை சென்ற வாரம் பார்த்தோம்

ஆகாசம் என்னும் மூலப்பொருளில் பிராணன் என்னும் விசை செயபுரிவதால் அண்டங்கள் அனைத்தும் உண்டாகின்றன சிருஷ்டி உண்டாவதற்கு முன்பு பிரளயம் எனப்படும் பேரழிவு நிகழ்ந்து அதைத் தொடர்ந்து அண்டங்கள் யாவும் ஸ்தம்பித நிலையை அடைகின்றன.

பிரளயத்தின்போது முன்பிருந்த உலகங்கள், தோற்றங்கள், வடிவங்கள், வஸ்துக்கள் யாவும் அழிந்தொழிந்து ஆகாசம் என்னும் மூலப் பொருளில் ஒடுங்கி விடுகின்றன.

பஞ்ச பூதங்கள் எனப்படும் முதல் மூலப் பொருள்களில் ஆகாசத்தை தவிர்த்த ஏனைய நாலு மூலப்பொருள்களாகிய பிருதுவி (மண்) அப்பு (நீர்) தேயு (நெருப்பு) வாயு (காற்று) ஆகியவை அழிந்து ஆகாசத்தில் ஒடுங்கிவிடுகின்றன

இந்த நான்கும் முதலில் ஒன்றிலொன்று மறைந்து ஒடுங்கிய பின்னரே ஆகாசத்தில் அடக்கமாகின்றன.

நிலம் போன்ற திண்ம வடிவங்கள் நீர் இயல் நுண் பொருளாக மாறி விடுகின்றன பின்னர் நீர் நிலையிலின்று இன்னும் சூட்சும வடிவமாகிய அக்னி நிலைக்கு மாறி, எங்கும் வியாபகமாயிருந்து, அதைவிட சூட்சுமமான வாயு நிலைக்கு வந்து, இறுதியில் ஆகாசத்தில் அடங்கி பழைய நிலைக்கு வந்துவிடுகின்றன.

கணக்கிலடங்கா யுகங்களுக்குப் பின்னரே பிரளயம் ஏற்படுகிறது

பிரளயம் நிகழ்ந்த பின்னர் ஏகவஸ்துவாய் (7 ஆம் பக்கம் பார்க்க)

-அ. குமரகுரு -

### ஓ! முருகா நீயுமா?

அன்று—
அரக்கர் கொடுமை தாங்காது
தேவர் அவலக்குரல் கொடுக்க
சக்திமிக்க வேல் கொண்டு
அபயம் அளித்தவன் நீ
இன்று—
ஈழவரின் அவலக்குரல்
உன் திருச்செவியில் கேட்கலையோ?
தனயனைப் பறிகொடுத்த தாய் தந்தையர்
தாய் தந்தையரை இழந்த பச்சிளம் பாலகர்
கணவனைப் பறிகொடுத்த பத்தினியார்
துணைவியரைப் பிரிந்த கணவர்கள்
இப்படி எத்தனை எத்தனை அவலங்கள்!
இத்தனை கண்டும் நீ மௌனமா?
தேவர்கள் அவலந்தான் உனக்கு ஏற்பா?
மானுடத்தின் அவறல் அற்பமா?
வேண்டாமய்யா இந்தப் பாரபட்சம்.
இது நீடித்தால்—
ஈழத்தில் உன்னை வழிபட
ஆள் இல்லாமலே போய்விடும்
அரை நூற்றாண்டு காலமாக
உன் ஆலயங்களை வலம்வந்தவன்
அந்த உரிமையில் வேண்டுகிறேன்
சக்தி வேலை எடும்
கொடியோருக்குப் புத்தி புகட்டும்
இல்லையேல்—
எம்மை நீரே அழித்துவிடும்
போதும் ஐயா இந்தத் துயரம்!
முருகனே ஏதோ பார்த்துச் செய்யுங்கள்
நாங்கள் பரிதவித்துக் காத்திருக்கிறோம்
நல்லதோர் விடியலை நோக்கி
'ராஜீவ் தான் அப்படி என்றால்
ஓ! முருகா நீயுமா?' — என்று
எம்மைக் கூற வைக்காதே.

ச[illegible]

# இதயம் கவர்ந்திடும் இலக்கியப் பெண்மணி

இலக்கியங்களை ஆழ்ந்து படிக்கும் பொழுது வரும் சில அழகிய காட்சிகள் நம் நினைவை விட்டு அகலாது

அத்தகைய காட்சிகளில் இதுவும் ஒன்று.

பெரும் புலவர் ஒருவர் தான் எழுதிய கதையில் வரும் கதாநாயகியின் பெண்மைத் தன்மையை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்

அந்தக் கதாநாயகி என்று சொல்லப்படும் மகாராணி தன்னுடைய சிறந்த நான்கு குணங்களை நாற்படையாகவும், தன்னுடைய ஐம்புலன்களையும் சிறந்த அமைச்சராகவும் பெற்று, ஆட்சி செய்வதாக தன் கவிதைகளில் வர்ணித்துள்ளார்.

ரத, கஜ, துரக, பதாதி என்று சொல்லப்படும் நால்வகைப் படையும் அவளுடைய சிறந்த குணமாகிய அச்சம் நாணம், மடம், பயிர்ப்பு என்பவையாம். இவை யாவும் அந்த மகாராணியைத் தீய சக்திகள் என்னும் பகைவரிடமிருந்து காப்பாற்றும் சிறந்த படைகளாம்.

அவளுடைய மந்திரி சபையில் ஆலோசனை கூறும் அமைச்சரவையைக் கூறுகிறார்.

மெய், அவளுடைய உணர்ச்சி மந்திரியாம் வாய், சுவை மந்திரியாம். கண், காட்சி மந்திரியாம். மூக்கு, நுகர்ச்சி மந்திரியாம். செவி, அவளுடைய கேள்வி மந்திரியாம்.

அமைச்சரவை இருந்தால் மட்டும் போதுமா? அழகிய வெண்கொற்றக் குடை வேண்டாமா?

### நளவெண்பாவில் நயந்தவை

அதுதான் அவளது அழகிய முகம்.

அவளுடைய ஆட்சிக்கு வெற்றி முரசு வேண்டாமா? அதுதான் அவள் கால்களில் 'சல், சல்' என்று ஒலிக்கின்ற காற்சிலம்பு அதோடு அவளுடைய இரண்டு கண்களும் வேற்படை, வாட்படையாகும்.

இதன் கீழ் பெண்ணியல்பாகிய ராஜாங்கம் செழித்து நடக்கிறது. அவளுடைய ஆட்சி நோய், நொடி, வறுமை இல்லாது சுபீட்சமாக நடைபெறுகிறது.

இந்த ராஜாங்கம் எப்படி நடக்கும்? போர் முறை எப்படி இருக்கும்?

கேளுங்கள் அதையும்

நாணப்படை யானை மீது ஏறியபடி அவளைத் தலை குனிய வைத்து, நடத்தி வருகிறது. அவள் வரும்பொழுது 'வருகிறாள் மகாராணி' என்று கால் முரசுகள் ஒலிக்கின்றன.

அப்பொழுது 'கண்ணே' என்னும் குரல் கேட்கிறது. உடனே 'செவி'

### நங்கை

என்னும் பெயர் கொண்ட கேள்வி மந்திரி, தன் இலாகாவில் அந்த வார்த்தையைப் பதிவு செய்து கொண்டு இப்படி ஒரு குரல் கேட்டதை காட்சி மந்திரியாகிய கண் அவர்களுக்குத் தெரிவிக்கிறார்

உடனே காட்சி மந்திரி திரும்பிப் பார்க்கிறார். அடுத்த விநாடி அச்சப்படை (அதாவது தேர்ப்படை) வந்து அந்த மகாராணியைப் பயமுறுத்துகிறது. அவள் அச்சத்தில் அழகு ததும்ப நிற்கிறாள். உடனே குரல் கொடுத்த ஆண்மகன் அச்சம் தவிர்க்க அருகில் வருகிறான்

அவளது நுகர்ச்சி மந்திரியாகிய கனம் 'மூக்கு' அவர்கள் தன் இலாகாவில் அந்த ஆடவனின் மணத்தைப் பதிவு செய்து கொள்கிறார்.

அந்த அளவுக்கு அருகில் வந்து விட்டான் அவன்! அப்படியே கட்டி ஒரு முத்தம் — கட்டாணி முத்தம் — கொடுக்கிறான் அந்த ஆண்மகன்.

உடனே சுவை மந்திரியாகிய கனம் 'வாய்' அவர்கள் அதன் சுவை (6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விருதுக்காக ஏங்கவில்லை
## நடிகர் சிவகுமார் கூறுகின்றார்

தேசிய சிறந்த நடிகர் விருது கிடைக்கவில்லையே என நான் ஒருபோதும் வருந்தவில்லை. மக்களுக்காகவே நடிக்கிறேன். அவர்களின் பாராட்டுக்களையே பெரிதாக மதிக்கிறேன் என நடிகர் சிவகுமார் கூறுகிறார்.

நாலுபேர் சேர்ந்த குழுவினைத் திருப்தி செய்கின்ற திராணி எனக்கு இல்லாமல் இருக்கலாம்

ஆனால் எங்கோ ஒரு மூலையில் கூடாரத் தியேட்டரில் தரையில் உட்கார்ந்து சினிமா பார்க்கிருனே ரசிகன் அவனையும், நகரத்து குளிர் ஊட்டப்பட்ட தியேட்டரில் உயர் வகுப்பில் உட்கார்ந்து சினிமா பார்க்கும் ரசிகனையும் என் நடிப்பு திருப்திப் படுத்துகிறதே அதுதான் எனக்கு விருது

ஆறுகோடிப் பேரை திருப்திப்படுத்தும் என் நடிப்பு நாலுபேரை திருப்திப்படுத்தவில்லை என்றால் எனக்கு கவலை இல்லை; வருத்தமும் இல்லை என்கிறார் சிவா

### தமிழ்ப் படத்தில் சத்ருக்கன் சின்ஹா

தமிழ்ப்படம் ஒன்றில் முதல் தடவையாக நடிக்கவுள்ளார் பிரபல இந்திநடிகர் சத்ருக்கன் சின்ஹா.

70 எம் எம்மில் தயாராகும் இப்படத்தை சுபாகர் இயக்கவுள்ளார்

ரஜனிகாந்தைப்போல் தனிப்பட்ட தனக்குரிய ஸ்டைலால் நடிப்பில் தனக்கென ஒருபாணியை அமைத்து மொழிகளுக்கப்பால் இந்தியா முழுவதும் பரவலாக தனக்கென ஒரு பெயரைச் சம்பாதித்துள்ளவர் சத்துருக்கன் சின்ஹா.

இயக்குநர் சுபாகர் இவரது தமிழ் பிரவேசம் பற்றி குறிப்பிடுகையில்;

ஆங்கிலப் பாணியில் அம்பிரமாக உடையணிந்து காட்சிக்கு காட்சி வரும் சத்ருக்கன் நிச்சயம் தமிழ் ரசிகர்களைக் கவருவார்.

தொடர்ந்து ஒரு சில குறிப்பிட்ட நடிகர்களின் முகத்தையே பார்த்துப் பழகிய தமிழ்ப்பட ரசிகர்களுக்கு இவர் ஒரு மாற்று மருந்தாவார் என்றார்.

### மீண்டும் ஜெயச்சித்ரா

பலகால திரையுலக அஞ்ஞான வாசத்தின் பின் நடிகை ஜெயச்சித்ரா தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

நீண்ட காலத்தின் பின்பு ஜெயச்சித்ரா குணசித்திர பாத்திரமேற்று நடிக்கவுள்ள படம் 'நானே வருவேன்'

# ரஜனியுடன் போட்டி என ஸ்ரீதேவி பேட்டி

'மூன்று முடிச்சு' படத்தில் எனக்கும் ரஜனிகாந்துக்கும் ஒரே போட்டி. ஒவ்வொரு காட்சி முடிவிலும் இயக்குநர் பாலசந்தர் இருவருக்கும் 'வெரிகுட்' சொல்வார் யார் அதிகம் ''வெரிகுட்'' வாங்குவது என்று எங்களுக்குள் போட்டி.



இவ்வாறு ஸ்ரீதேவி பேட்டி ஒன்றின்போது குறிப்பிட்டார்

நான் நிறைய வெரிகுட் வாங்கினேன். ரஜனி ஒரு முறை அடிகூட வாங்கினார். என்றார் அவர்.

தமிழ்ப் படவுலகில் பல 'வெரிகுட்'களை வாங்கிய ஸ்ரீதேவி இப்பொழுது இந்திப்படவுலகிலும் பல 'வெரிகுட்'களை வாங்கிக் கொண்டிருக்கிறார்.


## சிவாஜியின் 'டானிக்'

என்னைப்பற்றி என்னென்னவோ வம்பு பேசுகிறார்களே என்று நடிகர் திலகத்திடம் ஒரு நாள் வருத்தப்பட்டேன் ''ஒரு கலைஞன் வளர்ச்சியடையும் போது வம்புகள், தூற்றல்கள், விதண்டாவாதங்கள் எல்லாம் வரும், அவற்றையெல்லாம் நீ காதில் போட்டுக் கொள்ளாதே. உணர்ச்சி வசப்பட்டு நடிக்கலாமே தவிர உணர்ச்சி வசப்பட்டு வம்புகளுக்குப் பதில்சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.'' என்று சிவாஜி புத்திமதி சொன்னார். அந்த அறிவுரை பெரிய டானிக்காக இருந்தது

வளர்ந்து வரும் இளம் நடிகை ஒருவர் சொன்னது.

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 50



அனுப்புபவர் பெயர்:

திரு/திருமதி/செல்வன்/செல்வி: .......................

வயது: .......................

விலாசம் .......................

ஒப்பம்: .......................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

**இடமிருந்து வலம்**

1. ஒரு விளையாட்டு
5. சொந்த
6. நந்தனார் சென்ற இடம் குழம்பியுள்ளது.
9. வியாபார நிலையம்
10. கேள்வி
11. புத்திக் கூர்மை
13. நான்கு பக்கங்களும் சமனானது.
14. உணவு
15. ரகம்
17. இந்தியாவில் மாநில அந்தஸ்து பெற்ற பகுதி,ஒரு எழுத்தை தவறவிட்டுள்ளது.
18. மெய்

**மேலிருந்து கீழ்**

1. வடிவற்ற பறவை எனக் கருதப்படுவது
2. சாறு
3. விவசாயம்
4. ஹோ-சி-மின் இந்த நாட்டின் தந்தை எனப் போற்றப்படுபவர்
7. எமது பகுதியில் பல விடயங்களில் இது நடைமுறையில் உள்ளது
8. ஓவியம்
10. பிரதிகூலம்
11. தித்திப்பு
12. உமது
13. பாலைவனம்
14. தமிழ்ப் பகுதிகளில் முகாமிட்டுள்ளவர்களுக்குரிய ஆங்கிலப் பதம்
15. நஞ்சுக்கு 'ம்' இல்லை
16. தோள் நடுப்பகுதியை இழந்து விட்டது

### சொற்சிலம்பம் இல. 48 விடைகள்

**இடமிருந்து வலம்**

1 சமபோகிதம் 6 சிலை, 7. வட, 8 கலை 9. நாடகம், 10. ரவி, 11. வடு, 12. நாம் 14 கொடி, 16. குதிரை வலு, 19. கோடு 20 பவுண், 21. தாளம், 22. சைத, 23. மைதானம், (இச்சொல் கணக்கில் எடுக்கப்படவில்லை)

**மேலிருந்து கீழ்**

1. சசி, 2. மலைநாடு, 3. சிவகதி, 4. தடம், 5. துணைவி, 8. கரம், 11. வரகு, 12 நாடி, 13. விரைவு, 14. கொலு 15. படும், 17. திபத, 18. வண்மை, 19 கோளம், 21. தான.

### சொற்சிலம்பம் இல. 48 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வி சர்வேஸ்வரி கதிரித்தம்பி இருபாலை, கோப்பாய்.

இரண்டாம் பரிசு:- திரு எஸ் சுவாமிநாதன் பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

மூன்றாம் பரிசு:- செல்வி சரஸ்வதி கந்தசாமித்துரை உடையாமணல், வல்வெட்டித்துறை.

✱ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம்அனுப்பி வைக்கப்படும் நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

## வெள்ளித் திரை

## மன்னவனின்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

லில் சட்டநாதீஸ்வரர் கோவிலுக்கும் பின்னர் வெய்யிலுகந்த பிள்ளையார் கோவில், வீரமாகாளியம்மன் கோயில், கந்தசுவாமி கோயில் கைலாயநாதர் கோயில், கைலாய நாயகியம்மன் கோயில், கைலாய விநாயகர் கோயிலெல்லாம் சென்று பக்தி பரவசத்துடன் சுவாமி தரிசனம் செய்த அரச தம்பதியினர் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

### வெள்ளைக் கொள்ளையர்

குதிரைவீரர்கள் புடை சூழ மன்னனின் சிவிகை நல்லூர் கோட்டையை நெருங்கியதும் மீண்டும் ஜெயபேரிகை முழங்கத் தொடங்குகிறது. இடையிடையே துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்படுகின்றன துப்பாக்கி சத்தம் கேட்டதும் மன்னனின் முகத்தில் புன்னகை இழையோடுகிறது

இதை அவதானித்துக் கொண்ட ராணி—

''படைக்கலன்களின் ஓசை கேட்டால் மன்னனுக்கு ஆனந்தம் பிறந்துவிடும்'' என்கிருள்.

அப்போது மன்னன் 'அந்த துப்பாக்கிகளை வைத்துதான் தர்ப்பாக்கிய பறங்கியர் மீண்டும் வந்தால் அவர்களை பாக்கியில்லாமல் செய்யக் காத்திருக்கிறேன்' என்கிறான்.

ராணி; என் மன்னனுக்கு சதா வெள்ளையரின் நினைவுதான், .

மன்னன்: (நமுட்டுச் சிரிப்புடன்) இல்லாமலிருக்குமா ராணி. எம்மையெல்லாம் கொள்ளை கொள்ள வந்தவர்களல்லவா? அவர்களை இலேசில் மறந்துவிட முடியுமா...?

மன்னன் இவ்வாறு சொன்னதும் கலகலவென நகைக்கிருள் ராணி. சிவிகை அரண்மனை வாயிலை அடைந்ததும் அரச தம்பதியினர் இறங்கிச் செல்கின்றனர். ஜெயபேரிகை முழங்கிக் கொண்டிருக்கிறது!

ஆனைப்பந்தியிலிருந்து யானைப்பாகனும் நல்லூர் கோட்டைக்கு அழைத்து வரப்பட்ட பட்டத்து யானை ஒரு முறை பிளிறி ஒப்கிறது அதன் மத்தகத்தில் மணிப்பட்டை கட்டி அலங்கரிக்கப்பட்ட பின் முதுகிலே இரத்தினக் கம்பளம் போர்க்கப்படுகிறது ..

மீண்டும் களிறு பிளிறுகிறது! மன்னன் வெற்றி உலா புறப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இராஜதானி வீதியெங்கும் மக்கள் வெள்ளம் கரை புரள்கிறது!

பல காத தூரமிருந்து வெற்றிவிழாவை கண்டு களிக்க வந்த குடிமக்கள் தாகசாந்தி பெற ஆங்காங்கே தண்ணீர் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் பனங்கட்டித் தண்ணீர்,ஷாறு காய்த்தண்ணீர்,மோர்த் தண்ணீர் வழங்கப்படுகிறது. பல சாவடிகளில் பாக்கஞ்சியும் பாணிப் பனாட்டும் வழங்கப்படுகின்றன.

நாழிகை ஆக ஆக இராஜதானியில் ஜனக் கூட்டம் பெருகிக்கொண்டிருக்கிறது. வெள்ளையரை வெஞ்சமரில் தோற்கடித்த வெற்றி வேந்தன் 'ஊர்கோலம்' வருவதைக் காண வழி நெடுகிலும் மக்கள் விழி வைத்துக் காத்து நிற்கின்றனர்.

-(வளரும்)

## தியாக மாமலை....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து தோழர்களும் தயார். இன்றே வீரசபதமெடுப்போம்.

வெள்ளையனை எதிர்த்து 1915 ல் லாகூரில் முழக்கமிட்டானே — பதினெட்டாவது வயதில் தூக்கிவிடப்பட்டானே கர்த்தார்சிங் அந்த மாவீரன் பெயரால் சூளுரைப்போம் என்றான் பகத்சிங்.

புரட்சிகரத் திட்டங்களில் தனிமனிதனுக்கு முக்கியத்துவம் இடையாது துப்பாக்கியின் விசையை இழுப்பவன் யாராயுமிருக்கலாம். தாம் செய்யும் கொலை பனிதனிதரால் செய்யப்படுவதல்ல,

லாலா லஜபதிராயின் மரணத்துக்கு எதிராகத் துடிக்கும் பாரதத்தின் கோலம் தான் இக்கொலை.

1928 டிசம்பர் 17. பிற்பகல் 4 30 பொலீஸ் நிலையத்திலிருந்து வெள்ளை அதிகாரி சாண்டர்ஸ் மோட்டார் சயிக்கிளில் வெளியே வருகிறான் வெளியே வருபவன் கொடியவன் ஸ்கொட் தான் எனக் கருதி பகத்சிங் சைகை காட்டினன். அவன் தோழன் ராஜகுரு சுடுவதற்குத் தயாரானான்.

டுமீல்! டுமீல்! டுமீல்! சாண்டர்ஸ் குப்புற விழுகிருன் பகத்சிங்கும் சுடுகிருன்.

குண்டுச்சத்தம் கேட்டு ஸ்கொட்டும் கான்ஸ்டபிள் சனுசிங்கும் வெளியே ஓடி வருகின்றனர்.

மீண்டும் துப்பாக்கி வெடிச்சத்தம் ஸ்கொட் மீது சூடுபடுகிறது. சனுசிங்கும் காயப்படுகிருன்

பகத்சிங், ராஜகுரு சுகதேவ் ஆஸாத் புயல் வேகத்தில் தப்பி ஓடுகின்றனர்.

உயிருக்குப் பயந்து இவ்வீரர்கள் தப்பி ஓடவில்லை. விடுதலைக் களத்தில் இன்னும் விதைக்க வேண்டிய விடுதலை விதைகளை விதைக்க வேண்டியே தப்பிச் சென்றனர்.

அப்படிச் சென்றவர்கள் அடுத்த திட்டத்தை வரைய ஆயத்தமாயினர்.

பகத்சிங் மிகு பக்குவமாக இனிச் செய்யப் போகும் திட்டங்களைத் தோழர்களுக்கு விவரித்தான்.

(வளரும்)

## நிழலும்--

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பா நேற்று யாரை ஏசினுரோ...... அதே தேவன்தான் வருகின்ருன்

இப்போதோ வீட்டில் என்னையும் என் மகனையும் தவிர வேறு எவருமில்லை இப்படி எத்தனை நாட்கள் நானும் இந்தத் தேவனும் கதைத்திருக்கிறோம். அப்பொழுது எல்லாம் தோன்றுத ஒரு பயம் இப்பொழுது என்னைப்பிடித்துக் கொள்கிறது.

இப்பொழுது யாராவது அயலவர்களோ இல்லையேல் அப்பாவோ வந்து என்னையும் தேவனையும் கண்டுவிட்டால் .

—(வளரும்)

**கவனிக்குக**

கடந்தவாரம் சஞ்சீவியில் வெளியாகியிருந்த இசைவேந்தன் ஷண்முகரத்தினம் அவர்களைப் பேட்டி கண்டவர் புல்லாங்குழல் வித்துவான் திரு. ஏ. நமசிவாயம் அவர்களாவார்.

தவறுதலாக அவரது பெயர் வி. நமசிவாயம் எனப் பிரசுரமாகியிருந்தது.

## புதுக்கவிதை .--

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எப்போது சமமான உரிமை கொடுத்து கை கொடுக்கிறதோ அப்போது நாங்களும் தமிழர்களிடத்தில் இந்தியாவைப் பற்றிப் பேசுவோம் அதுவரை தமிழனிடத்தில் தமிழனைப் பற்றித்தான் பேசுவோம். ✱

## உலகத் தமிழ் மாநாடு அன்றே---

(-4ம்பக்கத் தொடர்ச்சி)

பாடல்களும் பாடிவரவேற்பாராயினர்.

''இனியபல் கீதங்கள் இசைப்பதும் யாங்கள்
எண்ணில்பல் கனவுகள் காண்பதும் யாங்கள்
தனிமையாய்த் திரைகடற் றுறைகளிற் றிரிந்தும்
துறந்த பாழ் யாற்றிடை கரையினி லிருந்தும்
மனித வாழ் வனைத்து முலகினி லிழந்து
மதியொளி தவழும் மதியிலே யெனினும்
நனிபட வுலகை நாளுமே யாட்டி
நடத்துவோ ரம்ம நாங்களே போலும்''

இவ்வாறு கூவியழைப்ப வந்து கூடிய புலவர்கள் கலா நிலையமென்னும் சங்கத்தமர்ந்து தமிழாய்ந்து வந்த காலத்தில் பருவகாலந்தோறும் இரு மாதங்களுக்கொரு முறை ஞாயிறு என்னும் ஏட்டினைப் புத்தகவுருவில் வெளியிட்டு வந்தார்கள்.

### ஞாயிறு மலர்ந்தது

இளவேனிற்கதிர், முதுவேனிற்கதிர், கார்க்கதிர், கூதிர்க்கதிர், முன்பனிக்கதிர், பின்பனிக்கதிர் எனப் பருவகாலந்தோறும் மலர்ந்து மணங்கமழ்ந்த வெளியீடுகள் தமிழ் நாட்டவரையும் தொட்டன

இவற்றைப் படித்து மகிழ்ந்த மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் உழுவலன்போடு வியந்து பாராட்டியதும் உண்டு.

''மாமலி தமிழிற் பிறமொழி தம்மில்
வயங்குறு பற்பல பொருளும்
தேமலி தரவே மாந்தர் நன் குணரச்
செய்வதற் கியற்றமிழ் மாட்தை
பாமலி வுறநன் னடஞ்செயு மீழப்
பைதிரற் றன்னிடைத் தோன்றும்
ஏமலி புகழ்சேர் ஞாயிறு விளங்க
இறைவன தடிபர வுதுமே''

இவ்வாறு இசைக்கின்றார்.

என்னும் இவற்றில் இலங்கை மாத்திரமன்றி இந்தியாவடைந்த பேறுகளையும் நம்மவர் ஆராய்ந்தனர்

அவற்றை இக்காலத்துக்கு அமைவான ஆராய்ச்சியின் முறையில் விளக்கினர். கலைகளின் புத்துயிர்ப்புக்காகவும் நாட்டின் நோக்கங்கள் கைகூடுவதற்காகவும் பெருமுயற்சி எடுத்தனர்.

இங்ஙனம் முயன்ற வேலையில் காலநிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றபோது தமிழ் நாட்டின் மகிபாலன் பட்டி பண்டிதமணி கதிரேசச் செட்டியார் என்னும் பேராசிரியர் விழாவுக்குத் தலைமை வகித்துப் பல பாடல்களில் கலா நிலையத்தை வாழ்த்தி

''வளமலி யீழ நாட்டிடைத் தோன்றி
மதிவலி படைத்தநல் லறிஞர்
உளமலி யுவகை பெறவுய ருணர்வா
மொளி திகழ் ஞாயிறென் றுவந்து
கோளமலி பருவக் கதிரைகள் கின்று
கோதிலாத் தமிழ்மொழி தழைப்பத்
தனமலி புலவோர்க் குதவுவா னுற்ற
தகு கலா நிலையம்வா ழியசே''

இத்தகைய புகழ்பூத்த கலா நிலையத்தின் காரிய தரிசியாய சத்தையா நவரத்தினம் பிற்காலத்தில் கலைப்புலவர் எனப் பட்டம் பெற்றவர், எங்கள் பண்டிதமணிக்கும் கலா நிலயத்துக்கும் உள்ள தொடர்பினை விரிவாக எழுதியுள்ளார் அதன் சுருக்கத்தின் சுருக்கத்தை தயாவது கண்டு நாமறிதல் இன்றியமையாததாகும்

### கலைப்புலவரின் கருத்து

'பண்டிதர் அவர்களை முப்பது ஆண்டுகளாக எனக்கு நன்கு தெரியும் யாழ்ப்பாணக் கலாநிலையம் ஆரம்பித்த காலம் தொடக்கம் அவருடன் நெருங்கிப் பழகிக் கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. கலா நிலையப் பணிகளில் சலிப்பின்றி உழைத்தவர்களுள் இவரும் ஒருவர். அக்கழகத்தின் காரிய நிர்வாக சபையிலும், ஞாயிறு என்னும் செந்தமிழ் வெளியீட்டின் அலுவற் குழுவிலும், நூலாராய்ச்சிக் குழுவிலும் உறுப்பினராக இருந்து அருள்தொண்டு ஆற்றினர்கள் கலா நிலையத்தில்தான் பண்டிதர் அவர்கள் முதல் விரிவுரைகள் ஆற்றத் தொடங்கினர்கள். அவரின் முதல் விரிவுரை 'சின்னத் தம்பிப்புலவர்' என்னும் பொருள் பற்றியதாகும் பின்னர் குசேலோ பாக்கியானம், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, நாவலரும் தமிழும் என்பன பற்றி விரிவுரை ஆற்றினர்கள்'

'கலா நிலையக் கூட்டங்களுக்குத் தாம் ஒழுங்காக வருவதுடன், சைவாசிரிய கலாசாலை மாணவர்களையும் உடன் அழைத்து வருவார். நிலையத்தின் தமிழ் ஆக்க வேலைகளில் எனக்கு அவர் செய்த உதவியை நான் என்றும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்'.

'பண்டிதர் அவர்கள் ஒரு சிறந்த நண்பர் இனிமையாகவும் அன்பாகவும் தமது நண்பர்களுடன் நடந்துகொள்ளும் மனப்பான்மை பொருந்தியவர் அறிவுத்துறையில் ஈடுபட்டவர்களுடன் நெருங்கிப்பழகும் விருப்புடையவர். இலக்கியத்துறையிலும் வேறு கலைத்துறையிலும் புதிய கருத்துக்களை அறிய விரும்புபவர்.

வாழ்க்கையில் தாம் [illegible] மேடையில் [illegible]

பான்மை அற்றவர்கள். சைவசித்தாந்த உண்மைகளைத் தாம் நன்கு கற்று அறியும்வரை அவற்றைப் பற்றி விரிவுரைகள் நிகழ்த்துவதைத் தவறெனக் கருதி வாழ்ந்தவர்கள்.

இக்காரணத்தால் அக்காலத்தில் சமய விரிவுரைகள் நிகழ்த்துவதற்கு மறுத்திருந்தார்கள்.'

—(தொடரும்)

## இதயம்...

( ஆம் பக்க தொடர்ச்சி)

'இனிப்பு' என்று பதிவு செய்கிறார்.

அடுத்து அவன் அவளை உறுக அணைத்துக் கொள்கிருன். உணர்ச்சி மந்திரியாகிய முதன் மந்திரி மாண்புமிகு 'மெய்' அவர்கள் அந்தப் பெண்மை உணர்ச்சிக்கு முழு அனுமதி தருகிறார்.

நாணத்தை உடைக்கிறது படை. பிறகு தம்மை மறந்து பூரிக்க நலம்பாடி இரவு செல்கிறது

இதுதான் அவன் ராஜாங்கத்தின் ஒரு நாள் நடப்பு.

இந்த நடப்பையும் ராஜாங்க இலாகாக்களையும் பிரித்து வைத்திருக்கிருன் ஒரு கவி.

யார் அந்தக் கவி? புகழேந்திப் புலவர் தான்.

யார் அந்த மகாராணி? [illegible] இயே! ✱

## இன்றைய நிலையில்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட அனுபவத்தை மறந்து, தம்மையொத்த இன்னொர் இனத்தை அழிப்பதற்கு தமது அறிவையும் ஆற்றலையும் வழங்கிவரும் இந்த யூதர்களை ஒரு காலத்தில் ஹிட்லர் ஏன் பூண்டோடு அழியாது விட்டான் என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

வேத நூல்களில் காணும் உண்மையை மறந்து, சரித்திரங்களில் காணும் அனுபவரீதியான உண்மைகளை மறைத்து வாழமுற்படும் யாவரும் வள்ளுவரின் மேற்கூறிய கூற்றுக்கு இலக்காகி விடுவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரி லானும் கெடும்'' — குறள்.

சிங்கள மக்கள்தான் தர்மிஷ்ட ஆட்சியின் அடாவடித்தனத்துக்கு துணை போகிறார்கள் என்றால் — எமது தமிழர்களில் சிலரும் ஆட்சியின் அங்கமாக விளங்கி வருகிறார்களே. அழிவின் விளிம்பில் நிற்கிற கொடுங்கோல் மன்னனின் முடிவு தம்மையும் தொடரும் என்று அவர்களுக்கு விளங்கவில்லையா?

உலகில் தமிழ இனத்தை விடச்சிறந்த துணையில்லை. தீய இனத்தைவிடத் துன்பப்படுத்துவதும் வேறொன்றுமில்லை ஆசையால் சேரிடமறிந்து சேராமல் பதவிக்காகத் தன் இனத்தையே பகைவனுக்குக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பன் தொழிலை மேற்கொண்டுள்ள கோடரிக்காம்புகள் அனைவரும் ஈற்றில் அழிந்தொழிவது தவிர்க்க முடியாதது.

தெய்வமே மனித உருவில் வந்து கொடுங்கோன்மையாளர்களை அழித்துள்ள உண்மைகளை புராண, இதிகாசங்கள் கூறுகின்றன. இக்காலகட்டத்தில் எமக்கு அவசியமானவை அச்சமின்மை, தன் நம்பிக்கை ஆகியவை.

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே''

என்கிறான் புரட்சிக் கவிஞன் பாரதி.

ஆகையால் அச்சத்தை முதலில் தவிருங்கள். கொடுங்கோன்மையாளர்கள் யாராய் இருந்தாலும் அவர்களை எதிர்த்து நில்லுங்கள். அதுவே எமது இனத்தின் எதிர்காலத்திற்கு காப்புறுதி. ✱

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஏகாதசி என்பது விஷ்ணுசக்தியே

# அதற்குச் சமமான விரதம் இல்லை

ஒரு வருடத்தில் இருபத்தைந்து ஏகாதசிகள் உண்டு. அவற்றுள் மார்கழி மாதம் சுக்கில பட்ச ஏகாதசிக்கு "வைகுண்ட ஏகாதசி" என்று பெயர். இதுவே மோட்ச ஏகாதசி, சுவர்க்க ஏகாதசி என்ற பெயர்களாலும் அழைக்கப்படும்.

வைகுண்டநாதன் திருமால் வைகுண்டம் அவர் இருப்பிடம். எல்லா ஏகாதசிகளும் விஷ்ணுவின் பூசைக்குச் சிறந்ததாகக் கருதப்படினும், இந்த ஏகாதசிக்கு சிறப்பாக விஷ்ணுவின் சம்பந்தம் கூறப்பெறுவதால் இதற்கு இப்பெயர் வந்தது.

### வரலாறு

வைகுண்ட ஏகாதசியை ஒட்டி நடைபெறும் பகற்பத்து—இராப்பத்து உற்சவங்கள் தோன்றிய வரலாறு ஒன்று உண்டு

பன்னிரு ஆழ்வார்களில் இறுதியாக அவதரித்தவர் திருமங்கை ஆழ்வார். அவர் பாரத நாடு முழுவதும் யாத்திரை செய்து பற்பல திருத்தலங்களையும் பாடியுள்ளார். ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அரங்கநாதனுக்குத் திருப்பணிகள் பல செய்தவர். அவரது திருப்பணிகளால் அகமகிழ்வுற்ற ஸ்ரீ அரங்கநாதன் திருமங்கை ஆழ்வார் முன்தோன்றி 'உமக்கு என்ன வேண்டும்'? என்று கேட்டான். அதற்கு அவர் 'நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களை வேதத்திற்குச் சமமாக உலகத்தவர் மதிக்கும்படி செய்ய வேண்டும் நம்மாழ்வார் பரமபதம் அடைந்த தினமான மார்கழி மாத சுக்கிலபட்ச ஏகாதசியை பெரிய திருவிழாவாகக் கொண்டாட வேண்டும். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்காகவே ஒரு திருவிழா நடத்தப்பட வேண்டும்' என்று வரம் கேட்டார்.

ஸ்ரீ அரங்கநாதன் ஒரு நிபந்தனையுடன் மகிழ்ச்சியோடு இசைந்தான்

வேதங்களைச் சில காலங்களில் ஓதக்கூடாது என்ற நியதி இருக்கிறது. அதுபோல திவ்ய பிரபந்தத்தையும் திருக்கார்த்திகை முதல் யாரும் ஓதக்கூடாது. நம்மாழ்வாரை எழுந்தருளச் செய்து திருமங்கையாழ்வார் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவை நடத்தும் போதுதான் கோயில்களில் திவ்யபிரபந்தம் ஓதவேண்டும். கோயில்களில் அந்தத் திருவிழா முடிந்த பின்பு தான் மற்ற இடங்களில் திவ்ய பிரபந்தம் ஓதவேண்டும் என்பதுதான் அந்நிபந்தனை.

**● வைகுண்ட ஏகாதசி விரதம் இன்று**

வைகுண்ட ஏகாதசிக்கு முன்னர் பத்துநாட்கள் மற்ற ஆழ்வார்களுடைய திவ்ய பிரபந்தத்தையும், வைகுண்ட ஏகாதசியிலிருந்து பத்துநாட்கள் நம்மாழ்வாருடைய திருவாய் மொழியையும் ஓதுவர். முதலில் நடைபெறும் பத்துநாட்கள் உற்சவம் சிறிய திருநாள் — சிறிய திருவத்யயனோற்சவம் என்றும், பின்னர் நடைபெறும் பத்துநாட்கள் உற்சவம் பெரிய திருவத்யயனோற்சவம் - பெரிய திருநாள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

### பகல் பத்து

### இரா பத்து

இவ்வாறு ஆழ்வார்கள் அருளிய தமிழ்ப் பாடல்களுக்காகவே உற்சவங்கள் வைணவ ஆலயங்களில் நடைபெறுகின்றன வைகுண்ட ஏகாதசிக்கு முன்பு பத்துத் தினங்கள் திவ்ய பிரபந்த பாசுரங்களை எம்பெருமான் திருமுன்பு பிற்பகல் வேளைகளில் ஓதுவதால் பகல் பத்து என்றும் பின்னர் பத்துநாட்கள் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை மாலைவேளைகளில் ஓதுவதால் இராப்பத்து என்றும் அழைக்கப் பெறுகின்றன.

### கோயில்

சைவர்கள் கோயில் என்று சிறப்புப் பெயரால் சிதம்பரத்தை அழைப்பது போன்று வைஷ்ணவர்கள் ஸ்ரீரங்கத்தை கோயில் என்று சிறப்புப் பெயரால் அழைப்பர். வைகுண்ட ஏகாதசிக்கு முதல்நாளிரவு பகவான் அசுரர்களை மயக்க மோகனாவதாரம் எடுத்தது கொண்டாடப் பெறும் ஏகாதசியன்று சுவர்க்க வாசல் என்ற வாயில் புதிதாகத் திறக்கப்பெற்று, அதன்வழியே பரமன் திருவுருவம் எடுத்துச் செல்லப்பெற, மக்கள் உடன்சென்று வாயிலைக் கடந்து, பாவனையாகச் சுவர்க்கம் சேர்வர்.

காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை; தாய்க்குச் சமமான தெய்வம் இல்லை; காசிக்கு மேற்பட்ட தீர்த்தம் இல்லை; ஏகாதசிக்குச் சமமான விரதம் இல்லை; என்று அக்கினி புராணம் கூறுகின்றது "விரதம், உபவாசம் நியமம் இவற்றால் உடல் கஷ்டத்தை அனுபவித்தல், கரும்பைக் கசக்கி அதன் சாற்றை உண்பதுபோல் இன்பம் உண்டாகும்" என்று வியாசர் கூறுகிறார்.

ஏகாதசி அன்று நியமமாகச் சுத்த உபவாசம் இருப்பவனுக்கு ஒரு வியாதியும் வராது இரண்டு வேளையும் உபவாசம் இருக்க இயலாதவர் ஒருவேளையேனும் உண்ணாது இருத்தல் வேண்டும்.

ஏகாதசி என்பது ஒரு சக்தி. அவள் விஷ்ணுவின் திருமேனியில் விளங்குகிறாள். அசுரசக்தியை அழிப்பது இந்த விஷ்ணு சக்திதான் இந்த சக்தி விஷ்ணுவிடம் கேட்ட வரம் "ஏகாதசி அன்று தங்களை நினைத்து உண்மை மனத்துடனும். திடமான சித்தத்துடனும் விரதம் இருப்பவர்களைக் காத்தருள வேண்

(8 ஆம் பக்கம் பார்க்க

ஆத்மஜோதி நா. முத்தையா

# மக்கள் மகிமை

## அன்னையர்க்கரசி நல்ல தங்கம்மா

சீரான தமிழ்நூல் பலகற்று
சிறப்புற நன்மணிகள் அதில் எடுத்து
ஊரோர் உவந்து கேட்கும் வண்ணம்
உவக்கும் தமிழாயதை ஆக்கும்
பாரோர் போற்றிப் புகழ்ந்திடும்
பண்பான நற் பண்பினதயே
சராறு கைபோனருள் பெற்றிட்டே
இன்னலின்றி வாழ்வீர் இனிதே.

அன்னமளிப்போய் ஆடை அளிப்போய்
அநிகட்கு இல்லம் அமைத்தோய்
இன்னலுற்றுளம் நொந்தே ஓடுவோர்க்கு
இன்னல் நீக்கி இன்பம் அளிப்போய்
சொன்ன சொல் மாறு நன்னெறி நின்று
சோர்விலாப் பணிகள் பல செய்வோய்
அன்னையர்க்கு அரசியாம் நற் தங்கம்மாவே
ஆயிரம் பிறைகண்டு வாழி.

-சி. சபாநாதன்

(சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 62 ஆவது பிறந்ததினம் இம்மாதம் 7 ஆம் திகதி ஆகும் அதனை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது )

கல்லூரி அனுமதி:

# திறமை மட்டுமன்றி ஏனைய தகைமைகளும் கவனிக்கப்பட வேண்டும்

சர்ச்சை சக்கரம் பகுதியில் கல்லூரி அனுமதியில் முக்கிய இடம் திறமைக்கா வதிவிடத்திற்கா என்ற விவாதத்தில் இரு அன்பர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அனுமதி பற்றிய அரசின் கொள்கையை 1984/4 இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது இதன் அடிப்படையில் நோக்குமிடத்து கல்வி அமைச்சின் கொள்கை தெளிவானது"

யாழ் இந்துக்கல்லூரி யாழ் இந்து மகளிர் கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள முழுப் பிரச்சினைக்கும் மொத்தக் காரணம் யாழ் கல்வித் திணைக்களமே. கல்லூரி அதிபர்களின் அதிகாரங்களையும்-ஏன் பரீட்சை ஆணையாளரின் கடமைகளையும்-யாழ் கல்வித்திணைக்களம் கைப்பற்றி - மாணவர்களுக்கு தொல்லை கொடுத்து அதிகார வரம்பு மீறலில் ஈடுபட்டிருக்கிறது.

நிற்க, வில்வம் என்ற பெயரில் எழுதியுள்ள அன்பர் சில கல்லூரிகளைக் குறிப்பிட்டு அவை சிறந்த பொறியியலாளர், மருத்துவர், கல்விமான்களை உருவாக்கியுள்ளதாக எழுதியுள்ளார் அவர் பெயர் குறிப்பிடாத பல கல்லூரிகள் இன்னும் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளன கல்லூரிகளின் வளர்ச்சி உயர்ச்சியை உற்றுநோக்கின் அவைபெருமளவு அவ்வப்போது அக்கல்லூரிகளின் அதிபர்களாக விளங்கிய கல்விமான்களின் மகத்தான பணியின் பிரதிபலனே என அறியலாம்.

கல்லூரிகளின் சிறப்பு அதிபரினதும் - ஆசிரியர்களினதும் பணியிலேயே தங்கியுள்ளது சிறந்த மாணவர்களை உருவாக்குவது அவர்கள் வேலை இயல்பாகவே திறமையுடைய மாணவருக்கு முத்திரை குத்த இவர்கள் தேவை இல்லை.

அன்பர் வில்வம் தாம் குறிப்பிட்டுள்ள கல்லூரிகளை 'தேசிய சொத்தாக' மதித்துப் பேணவேண்டும் என்கிறார். 'தேசியம்' என்ற சொல்லின் வரைவிலக்கணம் என்ன? அரசியலில் அடிக்கடி உபயோகிக்கப்படும் பொருளிலா 'தேசியம்' என்று கூறுகிறார்? மக்கள் யாவருக்கும் பொதுவானது என்ற கருத்தில் கூறினால் வில்வம் குறிப்பிட்ட பாடசாலைகளைத் தவிர ஏனையவை மக்கள் உடைமையல்லவா? ஏன் பாடசாலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளன?

வில்வம் குறிப்பிட்டுள்ள பாடசாலைகள் அனைத்தும் இடைநிலைக் கல்லூரிகள். பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை சூழலில் பிள்ளைகளுக்கு கல்வி வழங்க வேண்டும் என சகல கல்விமான்களும் கூறுகிறார்கள் இதன் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்கள்கூட இலங்கையிலும் நிறுவப்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக்கழகம் இருக்கக் கூடியதாக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் பல்கலைக்கழகங்கள் ஏன் நிறுவப்பட்டன? தமிழ் மக்கள் ஏன் இவற்றைக் கோரினார்கள்? பல்கலைக்கழக மாணவருக்கு வேண்டிய சூழலிலான கல்வி சில குறிப்பிட்ட இடைநிலைக் கல்லூரிகளின் சூழலில் வாழும் 6ம் தர 11வயது மாணவ மாணவியருக்கு மட்டும் வேண்டாமா?

திறமை அடிப்படையில் அனுமதி ஆரம்பிக்கப்பட்ட பின்பு குறித்த கல்லூரிகளின் கல்வி வளர்ச்சி முன்பிலும் பார்க்கக் கூடியுள்ளதா? கல்லூரிகளில் கவனம் செலுத்தப்படும் விளையாட்டுத்துறை என்னவானது? பெற்றோருக்கு ஏற்பட்டுள்ள செலவு என்ன? திறமையுள்ள ஏழை மாணவர் அனைவரும் பயன் பெறுகின்றனரா? 'திறமைசாலிகளையே' வடிகட்டி எடுக்கும் இப்பாடசாலைகளில் ஜீ. சி. ஈ (சா/த) பெறுபேறு 'திறமைசாலிகளின்' எண்ணிக்கைக்கு ஈடாக இருக்கிறதா? 200 மாணவரில் 20 பேர் திறமைச் சித்தி எய்துவதிலும் பார்க்க 10 மாணவரில் இருவர் அத்தகைய சித்தி எய்தும் பொழுது சிறிய பள்ளிக்கூடம் சிறந்த கல்வியை வழங்கி உன்னத என்று கொள்வதில் என்ன தவறு?

**சர்ச்சை சக்கரம்**

வில்வத்தின் கட்டுரையில் ஏனைய சகல மாகாணங்களிலும் திறமையின் அடிப்படையில் பெரிய கல்லூரி அனுமதி நடைபெறுகிறது என்று கூறப்பட்டிருப்பது தவறு யாழ் மாவட்டத்தில் மட்டுமே கல்விப் பணிப்பாளர் சோதனை நடத்துகிறார். இங்கு மட்டுமே சோதனைப் பெறுபேறு மட்டும் தகைமையாகக் கொள்ளப்படுகிறது. யாழ் மாவட்ட சோதனை திட்டத்தின் அடிப்படையில் அதிவிசேட சித்திப் புள்ளிகளுக்கு கூடுதலாகப் பெறும் சூழலில் வாழும் மாணவனுக்குக்கூட 'பெரிய' கல்லூரிகளில் 6ம் வகுப்பில் இடமில்லை. ஆனால் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் 'துண்டு' பெறக் கூடிய பிற இடத்து மாணவருக்கு 7ம்வகுப்பிலாவது இடமுண்டு 'செல்வாக்கு' எங்கு பிரயோகமாகிறது?

கல்லூரி அனுமதிக்கு 'திறமை' மட்டுமே அடிப்படையாக இருக்கக் கூடாது. பல தகைமைகள் கணிக்கப்படவேண்டும். அவற்றில் வதிவிடமும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும்.

செ. கோடீஸ்வரன்

# நீத்தார் புகழாரம்

## நெஞ்சில் நிலைத்த செல்லையா கணேஸ்

11-01-1986 ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்த திரு செல்லைய கணேஸ் அவர்களின் பசுமையான நினைவு நண்பர்களது மனதில் அலைமோதிக் கொண்டிருக்கின்றது.

திரு கணேஸ், தான் இறுதியாக வகித்த அரச பதவிகளால் அப்பதவிகள் சிறப்புற்றதை யாருமே மறக்க மாட்டார்கள். மும்மொழிகளிலும் நல்ல தேர்ச்சியுடையோனுய் திகழ்ந்த இவர், தன் ஆரம்பக் கல்வியை அனுராதபுரத்தில் பெற்றுக் கொண்டமையே இம்மொழி ஆளுமைக்குக் காரணமாகும்

திரு. கணேஸ் பொது இலிகிதர் சேவையிலிருந்து அதிவிசேஷப் பிரிவுக்கு பதவி உயர்வு பெற்று ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளராக, பின்னர் நீதிமன்றப் பதிவாளராக, அலுவலக உதவியாளராக புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய செயலகங்களில் பதவி வகித்து தனது அன்பாலும், நிர்வாகத் திறமையாலும் பலரின் நன்மதிப்பைப் பெற்றார்

பின்னர் இலங்கை நிர்வாக சேவையில் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, திருகோணமலை ஆகிய இடங்களில் கடமையாற்றினர். திருகோணமலையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய காலத்தில் சரித்திரப்பிரசித்தி பெற்ற கன்னியா வெந்நீர் ஊற்றுக்கிணறுகள் அமைந்துள்ள பகுதியை அமைச்சின் அனுமதி பெற்று நவீனமயப்படுத்திய பெருமையும் இவருக்குண்டு.

யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்தில் உதவி இறங்குதுறை அளவையாளராகப் பதவி வகித்துத் தனது கடமையைச் செவ்வனே செய்து தனது மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெற்றதில் ஒரு வியப்புமில்லை.

எண்ணற்ற நண்பர்களைப் பெற்றிருந்த திரு கணேஸ் நட்புக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தார் கடமை முடிந்து இல்லம் திரும்பிக்கொண்டிருந்த வேளையில்—

காலன் துப்பாக்கிரவை உருவத்தில் அவரது உயிரைக் கவர்ந்து—

மனைவி, மக்கள், உற்றார், நண்பர்கள் என்று அவர் நேசித்த அவரை நேசித்த எல்லோரையும் அழவைத்து விட்டு அமரத்துவம் பெற்று விட்டார். ★

து. வைத்திலிங்கம்

## அருந்திறன்மிக்க அம்பிகைபாகன்

அம்பிகைபாகன்!

அலங்காரநாமம் இது. அந்த நகுலாம்பிகை பாகனும் அர்த்தநாரீஸ்வரராக நினைக்கவைப்பது.

அன்றொருநாள் ஐம்பத்தெட்டாண்டுகளுக்கு முன் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையின் பிரபலமானமுகாமையாளர் அரவணைப்பில் அகமும், முகமும் பொலிந்து விளங்கிய இளைஞன் ஒருவன் ஆருத்தரத்திலே அனுமதிக்கப்பட்டான் அப்போது நான் எட்டாம் வகுப்பின் (அக்காலத் தரப்பிரிவு) மாணுக்கன்.

எல்லோரையும் கவர்ந்திழுக்கக்கூடிய தோற்றத்தில் பொலிந்த அம்பிகைபாகனின் கல்வி மேலோங்க விரும்பிய தந்தையார் பின்னர் சென்னைப் பல்கலைக்கழக கல்லூரியிலே இளைஞனைச் சேர்க்கும் முயற்சியில் எமது தாய் மாமனார் அமிர்தலிங்கம்பிள்ளை அவர்களும் அறிஞர் திருமலை த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களும் உதவி புரிந்தனர்.

அதனால் எங்கள் ஆரம்ப அறிமுகம் விரிந்து வளர்ந்து நிரந்தர நட்புக்கு வித்தானது.

கலைமாணிப்பட்டம் பெற்று யாழ்நாடு திரும்பிய அம்பிகைபாகனின் உள்ளம் இயந்திரம் போலத் தொழிற்படத் தொடங்கியது. தான் ஓர் ஆசிரியராக வேண்டும் என்ற வேணவாவிலே சுவாமி விபுலாநந்தா அவர்களின் தூயதொடர்பும் வந்து அருக்கெய்தியது. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு ஒரு வளமான புனருத்தாரணத்திற்கு உதயமாக இந்நிகழ்ச்சி அமைந்தது.

இருவகையில் அருமையான கருமமாக வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் பதவி அம்பிகைபாகனின் உள்ளத்திலும், உச்சியிலும் அமர்ந்தது.

நம. சிவப்பிரகாசம்

அன்று தொட்டு உரிய வேளையில் ஓய்வுபெறும் வரையும் இச்சரித்திரம் விரிந்த பலநோக்குக் களஞ்சியமாக அமைந்தது.

சுவாமி விபுலாநந்தா அவர்களின் தூயவாழ்க்கை ஒளிவிளக்காக—வைத்தீஸ்வர வித்தியாலயம் விளங்க அவ்விளக்கிற் சுடர்விட்டு எரிந்தவண்ணம் அற்புதத்தையும் அதை அண்மித்த சுற்றுடலையும் அச்சோதியை அனுபவிக்கும்யாழ் அகத்தையும்களையும் கலாசாரமும் சமயநெறியும் தமிழ் சால்பும் விளங்கவைத்த அதிபவித்தார் அவர்கள் நினைவு, ஆண்டுகள் தோறும் நனவாகவே நன்கமையும் என்பது நல்லெண்ணம் மட்டுமல்ல திண்ணமுமாகும்.

(அமரர் அம்பிகைபாகனின் நினைவு தினம் இம்மாதம் 15 ஆம் திகதி ஆகும்) ★

# கிழக்கை வைத்துக் குழம்புவான்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவேண்டும். (3)தமிழரால் நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்புக்கு அமைவாகத்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருந்து வருகிறார். அவர் தனது அழுங்குப்பிடியை அணுவளவாவது விட்டுக்கொடுக்க ஆயத்தமில்லை.

முஸ்லிம்களையும் தமிழரையும் மோதவிட்டு, தனது காரியத்தைச் சாதிக்க முயற்சிக்கும் அரசு, முஸ்லிம்களுக்கெனத் தனியான அரசியற் கட்சி ஆரம்பிக்கப் பட்டதால் ஓரளவு அதிர்ச்சி அடைந்திருக்கின்றது அரசை ஆதரிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். தமிழ்முஸ்லிம் சிங்கள மாகாணங்களெனக் கிழக்கிலங்கையைப் பிரிக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

### இருசாராரும் புரிந்துகொள்ள வேண்டும்

தமிழரசில் முஸ்லிம்களின் நிலையென்ன எனக் கருத்து வெளியிட்ட தந்தை செல்வா இன்றில்லை. இந்நிலையில் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால், வாழ்விடத்தால் ஒன்றுபட்ட முஸ்லிம்களுக்குத் தனியான அரசியற் கட்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது புதிய முஸ்லிம் தலைமை தமிழீழ விடுதலைப் போராளிகளுடன், மேலே தரப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி தமக்குள் உள்ள ஐயங்களை அகற்றிக்கொள்வது இருபகுதியினருக்கும் நன்மை பயக்கும். முஸ்லிம்களும் தமிழரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால், அரசினால் அவர்கள் மீது குதிரை விடமுடியாது.

கிழக்கு மாகாணத்தில் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே எண்ணிக்கையில் அதிகமானவர்கள் என்றும் அம்மக்களுக்காகப் பேசும் உரிமை தமக்கே உண்டென்றும் ஐ. தே. க. அரசு இதுவரை கூறி வந்தது. இப்போது கல்குடாத் தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட த. வி. கூ. வேட்பாளரிலும் பார்க்க 505 வாக்குகளை மாத்திரம் மேலதிகமாகப் பெற்று வெற்றி பெற்று, தனது சொந்தத் தொகுதிக்கே செல்லாமல், கொழும்பில் அஞ்ஞாத வாசஞ் செய்யும் அமைச்சர் தேவநாயகம், கிழக்கிலங்கை மக்கள் வடமாகாணத்தவரோடு இணைந்து வாழ ஒருப்பட மாட்டார்கள் எனக் கூறியிருக்கிறார்.

இதுவரை முஸ்லிம் தலைவர்கள் என அழைக்கப்படுவோரின் அறிக்கைகளைக் காட்டி வெளியுலகை ஏமாற்றி வந்த அரசு, இப்போது அமைச்சர் தேவநாயகத்தை அரங்குக்குக் கொண்டு வந்திருக்கிறது. அதனை அவருக்குப் பின்வரும் உண்மையைச் சுட்டிக் காட்டவேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

### ஐ. தே. க. வுக்கு உரிமையில்லை

கிழக்கு மாகாணத்தில் 2 சிங்களவரும், 5 தமிழரும், 5 முஸ்லிம்களும் தெரிவு செய்யப்படக் கூடியதாகத் தேர்தற் தொகுதிகள் பிரிக்கப் பட்டிருக்கின்றன. கடந்த பொதுத் தேர்தலில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சிங்களத் தொகுதிகளான அம்பாறையிலும் சேருவிலவிலும் த. வி. கூட்டணி போட்டியிடவில்லை. மற்றைய தொகுதிகளை மாத்திரம் எடுத்துக் கொண்டால் கிழக்கு மாகாணத்தில் த. வி. கூட்டணி 1,39,925 வாக்குகளையும், ஐ. தே. கட்சி 1,24,621 வாக்குகளையும் பெற்றன. த. வி. கூட்டணி முஸ்லிம் தொகுதிகள் அனைத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க,

## ஞானசஞ்சீவி---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் முதல் மூலப் பொருள் ஆகாசமே.

பிரளயத்தின் பின், அகண்டாகாரமாக இருக்கின்ற ஆகாசத்தின் மீது பிராணன் என்னும் விசை தாங்கிக்கொண்டிருக்கிறது இந்நிலை எதுவும் மற்ற சூன்ய நிலை.

பின்னர் பிராணன் இயக்கத்தை உற்பவிக்கிறது. அதிர்வுகள் ஏற்பட்டு சலனம் பிறக்கின்றது இந்த இயக்கத்தின் விளைவாக அண்டங்கள் தோன்றுகின்றன. இதை சிருஷ்டி என்கிறோம்

சிருஷ்டி முழுவதும் ஒரே விநாடியில் நடந்து முடிவதில்லை சூரியர்கள், சந்திரர்கள், நட்சத்திரங்கள், நில உலகங்கள், ஜீவராசிகள், தாவரங்கள், எல்லாம் தமது பரிணாம வளர்ச்சியின் பக்குவங்களுக்கும் நியதிகளுக்கும் ஏற்ப, படிப்படியாகவே தோற்றம் பெறுகின்றன.

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா சயன நிலையில் இருக்கும் பொழுது பிரளயம் ஏற்படுவதாகவும் விழித்திருக்கும் நிலையில் சிருஷ்டி நிகழ்கிறதென்றும் வேதங்கள் கூறுகின்றன.

சயன நிலைக்குரிய ஒரு இரவு ஒரு கல்பம் அல்லது ஆயிரம் யுகங்கள் என்றும் விழிப்பு நிலைக்குரிய பகலும் ஒரு கல்பம் என்றும் கூறப்படுகிறது எமது உலகக் கணிப்பின்படி ஒரு யுகம் பல்லாயிரம் வருடங்களாகும்

நிர்குண பிரம்மனிலிருந்து வெளிப்படும் பிரகிருதியே இவ்வாறு ஆகாசமாகவும் (Matter) பிராணனுகவும் (Energy) காரியப்படுகிறது. இவைக்கு மூலகாரணமாயிருப்பது தெய்வமனம் என்றும் 'மகத்' என்றும், 'ஹிரண்யகர்பா' என்றும், 'சகுணபிரம்மன்' என்றும் ஞானிகள் கூறுவர். பிரம்மாவை [illegible] கூறப்படுகிறது ★

## ஈழத் தமிழரின் ...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

டான ஹன்சாட்டிலும் பதிவிடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கைக் குறிப்பான ஹன்சாட்டின் இணைப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிட்ட அந்த அறிக்கையை அதிலிருந்து அகற்றுவதாக இருப்பின் அதற்காகத் தனித் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்படல் வேண்டும் ஆகவே, அங்ஙனம் செய்து கொள்வதில் முக்கூட்டரசு சிரத்தை எடுக்கவில்லை.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் தாம் தமிழ் தேசிய இனவிடுதலைப் போராட்டத்துக்கு வித்திட்டிருந்தன. அப்போராட்டம் ஆயுதம் ஏந்திய இளைய தலைமுறையினரது தலைமையில் இன்று சர்வதேச கவனத்தையும், அனுசரணையையும் ஈர்த்து வருவ[illegible]

தொல்புரத்தைச் [illegible] தெல்லிப்பழையைச் சேர்ந்த வைத்தியநாதர் யோகநாதன் சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நந்தகுமார், கோப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை பொன்னுத்துரை, நாயன்மார்கட்டைச் சேர்ந்த சிதம்பரி ஆறுமுகம், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இராசதுரை சிவானந்தன், புலோலியைச் சேர்ந்த வி. சரவணபவன் ஆகிய எழுவரும் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீத்த ஒன்பது பேரில் அடங்குவர்.

தமிழ் மண்ணின் விடுதலைப் போராட்டத்துக்கு வித்திட்டவர்கள் 1497 ஜனவரியில் மரணித்த ஒன்பது தமிழர்கள். அவர்களே தமிழ் மண்ணின் உரிமைப்போரின் முதல் தியாகிகளுமாவர். அவர்களுக்கு தமிழ் மக்கள் அனைவரும் இன்று அஞ்சலி செலுத்துவோமாக ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேமியுங்கள்"
பாடசாலை பாக்
மாணவ மணிகளே!
200 மில்க்வைற் நீலசோப் அல்லது
80 பார் சோப் அல்லது
20 சுப்பமில்க் வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
பாடசாலை பாக்
ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்
கொள்ளுங்கள்.
-மில்க்வைற் யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

10 - 01 - 1987 சனிக்கிழமை

"மணிவிழா ஆண்டு மலர்"
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார்சோப் அல்லது
2 சுப்பமில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தி 133 ஐப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
·மில்க்வைற் யாழ்ப்பாணம்

# இந்தியாவின் அடுத்த நடவடிக்கை

## காமினி கொண்டு செல்லும் புதியயோசனையை பார்த்தபின்னரே

புதுடில்லி, ஜன. 9

அமைச்சர் காமினி திசநாயக்கா மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுப்பி வைத்திருக்கும் 'புதிய செய்தி'யைப் பார்த்த பின்னர் இந்திய அரசு அடுத்த நடவடிக்கையை எடுக்கும்.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் காமினி திசநாயக்கா இம்மாதம் 12, 13ஆம் திகதிகள் இந்திய இணை அமைச்சர்கள் சிதம்பரம், நட்வர் சிங், வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரை சந்திக்க இருக்கிறார்.

அப்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் 'புதிய செய்தி'யை இந்திய அமைச்சர்களிடம் இலங்கை அமைச்சர் கையளிப்பார்.

'புதிய செய்தி' தெரிவிக்கும் விஷயத்தைப் பொறுத்துத்தான் இந்திய அரசு இணை அமைச்சர்களை சென்னைக்கு அனுப்பும்.

புதிய செய்தியில் பழைய நிலையே காணப்பட்டால் இந்திய அரசு, இணை அமைச்சர்களை கொழும்புக்கோ சென்னைக்கோ அனுப்பாது.

சிதம்பரம் குழுவிடம் கடைசியாகச் சமர்ப்பித்த யோசனையில் இலங்கை பின்வாங்கிக் கொண்டது அல்லவா!

அதன் விளைவுகளை இலங்கை உணரும்வரை இந்தியா அடுத்த நடவடிக்கை எதையும் உடனடியாக எடுக்காது

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. அமைச்சர் காமினி திஸநாயக்கா மூலம் ஜனாதிபதி அனுப்பிய 'புதியசெய்தி' என்ன என்பது வெளியிடப்படவில்லை.

கொழும்பில் கடைசியாக இந்தியத் தூதர் திரு டிக்ஸிற்றைச் சந்தித்தபோதுகூட புதிய செய்தி என்ன என்பது பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன அவரிடம் கூறவில்லை.

இப்படி புதுடில்லி அரசுவட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

### அரச ஊழி--

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

கடமை எதுவும் செய்யாமல் நின்றனர்.

அத்தியாவசிய தேவையைக் கருத்தில் கொண்டு ஆஸ்பத்திரி ஊழியர்கள் நேற்று வெளிநடப்புச் செய்யவில்லை

மாவையில் சில அலுவலகங்களில் வழமைபோல் வேலைகள் நடைபெற்றன. (இ-10)

### யாழ்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மயிலிட்டிதெற்கு, பலாலி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் குத்தகைக்கு காணி எடுத்து பயிர் செய்து அறுவடை செய்யாமல் 1986 ஆரம்பத்தில் வெளியேறிய குத்தகைக் காரர்களுக்கான பயிரழிவு நஷ்ட விசாரணையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட தகுதியுடையோருக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்படுகிறது. (இ-எ)

# பயணிகள் இரவில் தங்குவதற்கு வவுனியாவில் வசதி

யாழ்ப்பாணம், ஜன.10

வவுனியாவில் இரவு நேரங்களில் தங்க வசதியின்றி அவதிப்படும் பயணிகளுக்கு உதவுமுகமாக இரண்டு வீடுகளை வவுனியா பிரஜைகள் குழு தெரிந்தெடுத்துள்ளது.

ரயில் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்ஆலயத்துக்கு முன்பாகவே இந்தவீடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

இந்தவீடுகள் நகரின் பாதுகாப்புச்சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தரின் கண்காணிப்பில் இருக்கும்.

இவ்வாறு தங்க விரும்பும் பயணிகள் அவுட்டசேக்குளர் வீதியில் உள்ள மேற்படி ஆலயத்துக்கு அருகாமையில் இருக்கும் வீடுகளுக்கு செல்லலாம். அல்லதுபஜாரில் காணப்படும் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தரின் உதவியை நாடலாம்

இவ்வாறு வவுனியா பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி என்.எம். எக்ஸ் சொரிணபாலா அறிவித்துள்ளார் (இ10)

# சிமெந்து தொழிற்சாலை முன்வாசல் மீண்டும் திறக்கப்பட்டது

காங்கேசன்துறை, ஜன. 10

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் முன்பக்க வாசல் மீண்டும் திறந்துவிடப் பட்டுள்ளது.

தொழிற்சாலையில் நடைபெற்று வந்த கொள்ளைகள் காரணமாக இந்த வாசல் சமீபகாலமாக முடப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சிமெந்து ஏற்றச் செல்லும் வாகனங்கள் இராணுவ முகாம் பக்கமாகச் சென்றே சிமெந்தை ஏற்றவேண்டி இருந்தது.

மீண்டும் வாசல் திறக்கப்பட்டதை அடுத்து சகல வாகனங்களும் இராணுவ முகாமுக்கு அருகால் செல்லாமல் தொழிற்சாலைக்குள் நுழைய முடியும்.

ஆனல் இந்த வாசல் வழியாக சிப்பாய்கள் வெளியேறலாம் என இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். (இ-68)

# கிழக்கை வைத்து..

(7-ப் பக்கத்தொடர்ச்சி)

லும் போட்டியிடாமலே ஐ. தே கட்சியிலும் பார்க்க 15,304 மேலதிக வாக்குகளைப் பெற்றது. எனவே, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்காகப் பேசும் உரிமை ஐ. தே. கட்சிக்கு இல்லை.

இதைவிட கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல்களில் திருமலை, மட்டக்களப்புமாவட்டங்களின் தலைமையைத் த. வி கூட்டணியும் அம்பாறை மாவட்டத்தின் தலைமையை ஒரு முஸ்லிமும் பெற்றார்கள்.

எனவே, ஐயத்திற்கு இடமின்றி, வடக்கு மாகாணத்திலுள்ள எல்லா மாவட்ட மக்களும், திருமலை, மட்டக்களப்பு மாவட்ட மக்களும், தமது பிரதேசம் ஒன்றிணைக்கப் படுவதற்கும், தமக்கெனத் தனியரசு அமைக்கப் படுவதற்கும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையில் அமைச்சர் தேவநாயகம் வடக்குக், கிழக்கு இணைப்புக்கு எதிராகக் கிழக்கிலங்கை மக்கள் சார்பில் கருத்து தெரிவிப்பது நகைப்புக்கிடமானது.

கடந்த பொதுத் தேர்தலில் இனப் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக உறுதியளித்து மக்களின் வாக்குகளைப் பெற்ற ஐ. தே. கட்சி ஒன்பது ஆண்டு கழிந்தும் அதைத் தீர்க்கவில்லை. பதிலாகப் பிரச்சினையை வளர்த்திருக்கிறது.

உண்மை எடுத்துக் காட்டப்படும்போது அதை 'இல்லை, இல்லை, என மறுக்கும் ஒருவரோடு பேச்சு நடத்தி இணக்கங் காண்பது முடியாத காரியம். எனவே கொண்டது விடாமை என்னும் தனது கொள்கையைக் கைவிட்டு, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பதை ஒப்புக்கொண்டு, அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தி, இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது ஜனாதிபதி அவர்களின் கடமையாகும். கடமையைச் சரிவரச் செய்து, இரு இனங்களிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தாமல், வெறுமனே பேசிப் பயனில்லை. ✱

# பாடசாலை வைத்தியஅதிகாரி பணிமனை இடம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜன. 10

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும் குருநகரிலும் தற்காலிகமாக இயங்கி வந்த பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை தற்போது 94, கொழும்புத்துறை வீதியில் உள்ள இந்து மகா வித்தியாலயத்துக்கு முன்னால் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

பிறநாடு செல்பவர்களுக்கும் வைத்திய பரிசோதனை செய்பவர்களுக்கும் புதன், சனி ஆகிய தினங்களில் தடுப்பூசி ஏற்றி சான்றிதழ் வழங்கும் வேலைகள் இப்பணிமனையில் மேற்கொள்ளப்படும்.

இப்படிப் பாடசாலை வைத்திய அதிகாரி அறிவித்து உள்ளார், (இ-எ)

# இந்திய கம்யூனிஸ்ட் கவலை

புதுடில்லி ஜன 9

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டு இருப்பது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

கட்சியின் வருடாந்த மாநாட்டின் முடிவில் தலைவர் திரு இ. எம். எஸ் நம்பூரிபாம் விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - எ)

### தொலைத்,..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் எனவும் தெரிய வருகிறது

இதேவேளை யாழ் தொலைத் தொடர்பு நிலையத்தின் முக்கிய பகுதிகள் சிப்பாய்களினால் மண் மூடைகள் அடுக்கப்பட்டு பதுகாக்கப்பட்டு வருகின்றன. (இ-10)

# ரூ.1000 இழந்த பெண்ணுக்கு இராணுவ அதிகாரி கொடுத்த 500 ரூபா

மட்டக்களப்பு, ஜன.10

தன்னிடம் இருந்த ஆயிரம் ரூபாவை சிப்பாய் ஒருவர் பறித்து விட்டதாகக் கூறி முறையிட்ட பெண்ணொருத்திக்கு மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரி தனது சட்டைப்பையில் இருந்து ஐந்நூறு ரூபாவைக் கொடுத்தார்.

இச்சம்பவம் வியாழக்கிழமை கல்லடி இராணுவ முகாமில் இடம்பெற்றது

ஊறணியில் உள்ள ஆயுதபடை முகாமை அகற்றும்படி கோரி 10 பெண்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று வியாழக்கிழமை அரச அதிபரின் முயற்சியினால் இணைப்பு அதிகாரியைச் சந்தித்து முறையிட்டது அல்லவா?

அச்சந்திப்பின்போது, தூதுக் குழுவில் அங்கம் வகித்த ஒரு பெண், "தேடுதல் என்று வீட்டினுள் புகுந்த சிப்பாய் ஒருவர் தன்னிடம் இருந்த 1,000 ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுவிட்டார்"-என்று கண்ணீர் மல்க இணைப்பதிகாரியிடம் முறையிட்டார்.

உடனே தனது சட்டைப்பையில் இருந்து 500 ரூபாவை எடுத்து அப்பெண்ணிடம் கொடுத்தார் இணைப்பதிகாரி,

இப்பணத்தை, ஊறுணி படைமுகாம் 'மெஸ்' நிதியில் கழித்து விடும்படி தனது கனிஷ்ட அதிகாரிக்கு அவர் உத்தரவிட்டார் (இ-எ-21)

### பருத்தித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ஜ் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவர்களின் தாக்குதலால் நிலைகுலைந்த சிப்பாய்கள் மீண்டும் முகாம் திரும்பினர்.

ஷெல் தாக்குதலுடன் புலிகளின் நடமாட்டமுள்ள பகுதிகளை நோக்கி கடலில் இருந்து பீரங்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப் பட்டது. (இ-160)

### இலங்கை-..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு காட்டி வருகின்றன.

இந்தச் சவாலை ஏற்க இந்தியா தயாராகவேண்டும்.

இலங்கைத் தமிழருக்கு உதவுவதில் இந்தியா போதிய அளவு அக்கறை காட்டவில்லை.

இனப்பிரச்சினையில் பாதிக்கப் பட்டவர்களுக்கான தனது ஆதரவை இந்தியா விரைந்து உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தியாவின் நல்லெண்ணத்தை வைத்து இலங்கை 'சவாரி' விடுகிறது என்று இந்தியா கருதினால்உடனடியாக அந்த 'சவாரி' போக்குக்கு பலியாகாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தீர்வு காண முடியாத நிலையில் இல்லாத் தன்மை காரணமாக இலங்கை இனப்பிரச்சினையை கைகழுவி விட இந்தியாவினால் முடியாது.

இந்தியா தனது புவியியல் நலன்களையும் மனிதாபிமானத்தையும்கருதி விரைந்து செயல்பட வேண்டும்.

இப்படி 'இந்து' தனது செவ்வாய் இதழில் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-ஐ-எ)

### ராஜீவ்.,.

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது அராஜகச் செயலாகும்என அவர் சுட்டிக் காட்டியிருப்பதாகவும் இங்கு அரசியல் வட்டாரங்களில் பலத்த பேச்சடிபட்டது. (அ)

### ஏகாதசி---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டும்"

அன்று முதல் ஏகாதசி விரதத்தை எல்லோரும் கைக்கொண்டனர். முனிவர்களும் தபோதனர்களும் "இது அவசியமான பகவானின் விருப்பம், கட்டளை" என்று நியமத்துடன் அதை ஏற்றுக்கொண்டனர். ஏகாதசி அன்று உபவாசம் இருப்பது, முழுநாளும் பட்டினி இருப்பது, மூன்று வேளைகளிலும் ஸ்நானம், சுத்த மனதுடன் ஜபம், கீர்த்தனம், ஹரியின் கதைகளைக் கேட்பது, படிப்பது இரவெல்லாம் தூங்காமல் தெய்வ சிந்தனையில் தன்னை ஈடுபடுத்துவது மறுநாட்காலையிலே ஹரி நாமத்தைச் சொல்லிக் கொண்டு துளசி தீர்த்தம் அருந்தியபின் உணவு ஏற்றுக்கொள்வது-இவை நியதியாகும்.

தானமும் தருமமும்

மனித ஜன்மத்திற்குத் தான் இந்தவிரதங்களும் நோன்புகளும் வைக்கப்பட்டன. இந்த ஜன்மத்தை அடைந்தவன் தன் செய்கைகளால் உயரவும் உயரலாம்; தாழ்ந்து அழியவும் முடியும். தாழாமல் காப்பதால் தானம் என்றும், அவனைத் தரித்து இருக்கச் செய்வதால் தருமம் என்றும் அழைக்கப்பட்டன.

# அரசின் போக்கில் அடிப்படை மாற்றம் இல்லையேல் எங்கள் கோரிக்கைகளில் மாற்றம் இராது

## பாலசிங்கம் பேட்டி

'எலைட்' என்ற இந்திய ஆங்கில வார சஞ்சிகைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் பேட்டி அளித்தார். அப் பேட்டியின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

கேள்வி: தமிழ் ஈழம் மூலம் கிடைக்க வேண்டிய இலட்சியங்கள் நிறைவேற்றப்பட்டால் தனி நாடு கோரிக்கையை நீங்கள் கைவிட்டுவிடுவீர்களா?

பதில்: ஸ்ரீலங்காவின் அரசமைப்பு தேசிய சிறுபான்மை மக்களை அங்கீகரிக்கவில்லை சிங்கள மக்களின் மொழியையும் மதத்தையுமே முன்னுரிமை கொடுத்துப் பாதுகாக்கிறது. ஸ்ரீலங்கா அரசமைப்பை இனவாத, இராணுவ வெறி பிடித்த ஒன்றாகவே நாம் கருதுகிறோம். தற்போதைய ஸ்ரீலங்கா அரசமைப்புச் சட்டத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதன்கீழ் முறையான அரசியல் தீர்வு ஒன்றைக் காண எம்மால் முடியாது.

கேள்வி: ஏதாவது மாற்றுத் தீர்வு தங்கள் மனதில் உள்ளதா?

பதில்: எமது நான்கு அம்ச அடிப்படைத் திட்டத்தைத் தவிர வேறு எதுவும் எம்மிடம் இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக பல குழுக்களினால் பல வித யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன ஒன்றுமே பலனளிக்கவில்லை. புதிய யோசனைகளைச் சமர்ப்பிப்பது பிரயோசனமற்றதாகிவிடும். ஸ்ரீலங்கா அரசு தான் தீர்வைக் காணவேண்டும்.

கேள்வி: மாற்று யோசனைகள் எதுவும் உங்களிடம் இல்லாவிடினும் ஏற்கக்கூடியதான யோசனைகள் எதையும் உங்களுக்குள்ளாவது வைத்து இருக்கிறீர்களா?

### அரசமைப்பை ஏற்கப் போவதில்லை

பதில்: ஒருவிஷயத்தை வெளியாகச் சொல்கிறேன் நாம் சோஷலிசப் புரட்சிவாதிகள். ஆகவே ஸ்ரீ லங்காவின் அரசமைப்பை ஏற்கப்போவது இல்லை இலங்கை அரசமைப்பு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தை ஒத்த பூர்ஷுவா ஜனநாயக முறை அதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. சோஷலிச அரசமைப்பே எமக்குத் தேவை.

கேள்வி: இந்திய அரசமைப்பையும் பூர்ஷுவா முறை என்று கருதுகிறீர்களா?

பதில்: இந்திய அரசமைப்புப் பற்றி கருத்துத் தெரிவிக்க நான் விரும்பவில்லை,



அன்ரன் பாலசிங்கம்

கேள்வி / உண்மையில் நீங்கள் கருதும் அரசமைப்பு முறை ரஷ்யா போன்றதா?

### மாற்று யோசனை: அழிவைத் தேடும்

பதில்: எமது கோரிக்கை தனிநாடு அது சோஷலிச ஜனநாயக முறையில் அமையும் யூகோஸ்லேவியா மாதிரியானது அது. மக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தான் யூகோஸ்லேவியா முறை ரஷ்ய முறையில் கட்சி, அரசாங்கமாக மாறுகிறது. நாம் ஜனநாயகம் முறையை மதிக்கின்றவர்கள் சரியான ஜனநாயகம் செயலளவிலான சமதர்ம சமூகத்தில் தான் இருக்கும்.

அதிகாரப் பரவலாக்கல் என்று கூறி ஒற்றையாட்சி அரசமைப்பு முறையை வைத்திருக்கவே இலங்கை விரும்புகிறது இந்தியமாதிரியை கடைப் பிடிக்க இலங்கை விரும்புகிறது. அது சரிவராது.

ஏற்றுக் கொள்ளக் கூடிய மாற்றுத் தீர்வாக சமஷ்டி அரசமைப்பை சமர்ப்பிக்க இலங்கை அரசு முன் வருமா என்பது கேள்விக் குறியாக உள்ளது ஏதாவது வரையறையை நாம் கூறவேண்டியது இல்லை.

நீண்ட குழாயின் தொங்கலில் ஒளியைக் காணாத நிலையில் நாம் மாற்று யோசனை ஒன்றைச் சமர்ப்பிப்பது அழிவைத் தேடுவதாகவே முடியும். ஈழம் கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டதாக கூறுவதில் போய் இது முடியும்.

மாதந்தோறும் நிலையை மாற்றிக் கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியல் கட்சி அல்ல நாம்.

நாம் விடுதலை இராணுவத்தினர் பல தியாகங்களை நாம் செய்துள்ளோம்.மாற்று யோசனை ஒன்றைச் சமர்ப்பித்து எம் இயக்கத்தின் தன்மையை பாதிக்க நாம் விரும்பவில்லை.

உருப்படியான யோசனைகளைச் சமர்ப்பிக்க வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு.

### மலையகத் தமிழர்

கேள்வி: ஈழம் அமைக்கப்பட்டால் அங்கு மலையகத் தமிழரை வரவேற்பீர்களா?

பதில்: அமைக்கப்பட்டால் [illegible] மலையக தமிழர் விரும்பினால் நாம் அவர்களை வரவேற்போம்.

கேள்வி: இலங்கையில் உள்ள தமிழரும் தமிழ் நாட்டில் உள்ள தமிழரும் சேர்ந்து தமிழர் மாநிலங்கள் சம்மேளனம் அமைக்கும் எண்ணம் உண்டா?

பதில்: அப்படியான எண்ணங்களுக்கு நாம் உடன்பாடில்லை எமது பிரச்சினை தனித்துவமானது. அதற்கான தீர்வு அந்த பிராந்தியத்துக்குள்ளே காணப்பட வேண்டும்.

கேள்வி: கூடுதல் சுயாட்சி கோரிக்கை, இந்தி திணிப்பு எதிர்ப்பு ஆகியவற்றுக்கு தமிழ் நாட்டில் ஆதரவளிப்பீர்களா?

பதில்: தமிழ்நாடு அரசியலில் நாம் தலையிடோம். இதை தெளிவாகக் கூறிவிட்டோம்.

கேள்வி: அதெப்படி முடியும்? இலங்கைப் பிரச்சினையில் தமிழ் நாட்டுத் தமிழரை சம்பந்தப்படுத்துகிறீர்கள். தமிழ் நாட்டு அரசியலில் நீங்கள் எப்படி சம்பந்தப்படாமல் இருக்க முடியும்?

பதில்: இந்தியாவில் உள்ள சமஷ்டி முறை தமிழருக்கு பெருமளவு சுயாட்சியை வழங்கியுள்ளது இங்கு மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் இல்லை. தமிழருக்கு இங்கு பிரச்சினைகள் பல இருக்கலாம். இலங்கையில் இருப்பது போல இனக் கொலை இங்கு இல்லை. இலங்கைத் தமிழர் இனக் கொலை செய்யப்படுகிறார்கள். நீதிக்கும் சுதந்திரத்துக்குமாக நாம் நடத்தும் போராட்டம் தமிழ் நாட்டு ஆதரவை மட்டு மல்ல, உலக நாடுகளின் ஆதரவையும் பெற்றுள்ளது.

### மக்களைப் பாதுகாக்கவே

கேள்வி: திரு. பாலசிங்கம் அவர்களே! நீங்கள் சோஷலிசவாதி, சோஷலிச இயக்கம் சர்வதேச ரீதியானது.

இன்றைய நவீன யுகத்தில், உலகமே ஒன்று என்று கருதப்படும் இக் காலத்தில் தமிழர், சிங்களவர் என்று குறுகிய நோக்கம் பற்றிப் பேசுவது பொருந்துமா?

பதில்: சோஷலிசவாதி என்ற முறையில் உலகம் முழுவதுமே ஒரு சோஷலிச குடும்பம் என்று நாம் கனவு காணுகிறோம்.

இருந்தாலும் யதார்த்த பூர்வமாகவும் சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது. நாம் எமது மக்களைப் பாதுகாக்கவே போராடுகிறோம்.

எமது போராட்டத்தை தேசிய இனத்தின் வளர்ச்சிக்காக நாம் நடத்தவில்லை. அரசபயங்கரவாதத்திற்கும் இனக் கொலைக்கும் ஆட்பட்ட தமிழ் மக்களைக்காப்பாற்றவே நாம் போராடுகிறோம்.

தனிநாடு மூலமாகவோ அல்லது உரிய மாற்றுத் தீர்வு மூலமாகவோ எம் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டவுடன் நிரந்தர சமாதானம் நிலவும்.

நீத்தார் பட்டியல்

## BALAN JEHORATNAM

The Death is Announced of Balan Jehoratnam Son of Late Dr. R. E W Jehoratnam and Mrs Jehoratnam (U.K.) Dearly Beloved Husband of Nagula Father of Jehania and Jehan Brother of Angeline (U K.) and Christine ( U. K. ) Cortage Leaving Residence.

19/3, Colombagam Road, Chundikuli.
for Burial at
St. John's Cemetry at 3-30 p m on
10 - 01 - 1987 (Today)

INPORMATION
BY FAMILY

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 16 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 10 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 16 Second Lane, Power-House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org